P. 39

ஓம்

தத்ஸத்.

# குருவருட் புகழ்.

இஃது

திருவருட் பிரகாசவள்ளலார் மரபு

காஞ்சிபுரம்

ஸ்ரீமத் நிச்சல இராமாநந்தஸ்வாமி அவர்கள்

மாணவரிலொருவராகிய

சிதாநந்தசாகரம்

ஆறுமுகஸ்வாமி அவர்களால்

இயற்றியதை

இராஜபாளையம் சாலிமகாரிஷி கோத்திரம்

சங்கத்தார்களால்

இராஜபாளையம் ஜெயராம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ரெஜிஸ்டர்டு.

விலை 1926. அணா 12



P. 39

ஓம்

தத்ஸத்.

சற்குருப்யோநம:

ஸ்ரீமத் திருவருட் பிரகாச வள்ளலார் மரபு

காஞ்சிபுரம்

# ஸ்ரீமத் நிச்சல இராமாநந்தஸ்வாமி அவர்கள்

பாதசேகரராகிய

# ஸ்ரீமத் கா. நிச்சல சொரூபாநந்தமணி அவர்களாலியற்றிய

## அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்னுரு மம்பலவ னருளமுத முண்டு வளர் பூர்ணஞான
மன்னுரு மருட்சோதி வள்ளலெனு மிராமலிங்கன் மரபுதித்து
மின்னுருங் கச்சிவளர் நிச்சல ராமாநந்த விமலன் றாளைத்
தன்னுருந் தன்னுளத்திற் சந்ததமுந் தரித்தன்பு தழைத்துவாழ்
வோன்.

நிச்சல சிதாநந்த சாகரனென் றுயர்ந்தவர்க ணிகழ்த்துஞ்சீரான்
முச்சலன மற்றொளிரு மாறுமுக வபிதானன் முத்திப்பேற்றை
யச்சமகன் றனைவருமே யடைய குருவருட் புகழென் றன்பா
லீந்த
உச்சிதநற் சந்தநிதமோதியுணர்ந்தவ ருண்மையுறுவார் மாதோ.

இந்நூலாசிரியர் மாணவரிலொருவராகிய

## இராஜபாளையம்

## க. மு. வ. கலுசுலிங்கமூப்பனார் அவர்களால்

இயற்றிய

## நேரிசை வெண்பா.

நிச்சல ராமாநந்த நின்மலனைத் தான்போற்றி
சச்சிதானந்த நிலை தானுணர்ந்து—யிச்சையுடன்
வந்தான் அறுமுகவன் மாமறைநூல் வோதி வைத்தான்
தந்தையினும் மிக்கான் தயை.

சிதானந்த சாகரமாந் தேசிகனைத் தான்றோன்றி
பதாசார மாயுணர்த்தும் பாவலனாய்—சுதாவாக
ஆண்டான் அடிமையென அடியேனை யாதரித்து
தாண்டவப்பேர் கொண்டான் தனித்து.

அழக நகரிற் பிறந்து ஆன்றோர் சரண்புகுந்து
வளமிகு சைதாப் பேட்டை வாழ்ந்திருந்து—உளமகிழ
ஜெயராஜ பாளையத்தில் திருப்புகழைத் தானபாடி
நயமாக அச்சியற்றினான்.

உ

ஓம்

தத்ஸத்.

வேலுமயிலுந்துணை.

# குருவருட்புகழ்.

## விநாயகர்ஸ்துதி.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

குருவருள் புகழை யென்றுங்
 குவலயந் தன்னிலாய்ந்தோர்
இருவினைச் செயல்களெல்லா
 மிரவிமுன் பனிபோற் செய்து
பெருவெளி மௌன மோனப்
 பிரம்ம ஞானந் தானுக்கிக்
கருவினி லடைந்திடாமற்
 கணபதி காப்பதாமே.

வேறு

அருட்புகழ் படிப்பவர்க ளன்பினுயர்வாலே
இருட்படு வினைப்பகுதி யென்று மகல்வாரே
மருட்குண மனைத்துலகில் வந்து தொடராதே
யறுப்பது சிவக்குமர னங்கைவடி வேலா. 2

---

வேறு

ஆதிமறை யாகம மளித்தமுக மொன்றே
வயனுணர வேசிரை யடைத்த முக மொன்றே
கோதிலடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
கும்பமுனிக் கின்புதவி நின்றமுக மொன்றே

வாதிலுயர் சூரரை மடித்தமுக மொன்றே
மாதிருவர் தங்களை மணந்தமுக மொன்றே
சோதிமய மானபொருள் நீ யருளல் வேண்டுஞ்
சுவாமிமலை மீதிலுறை நாம முருகோனே. 3

---

## திருப்புகழ் சந்தம்.

### விநாயகர் துதி.

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன—தனதான.

சத்துவ சமரச வித்தக சிவசுத
தற்பர பிரணவ முருவாகி.
சர்க்கரை யதிரச மப்பமொ டவல்பொரி
சத்தியமுட னுகர் முதல்வோனே.
நித்திய நிர்மல வுத்தம ரனுபவ
நிஷ்கள வடிவனு னருள்தாராய்.
நிர்க்குண விகசித பக்தியி லுறைபவர்
நித்தமு மடிதொழ வருதேவே.
சித்திவிநாயக வத்தியின் மாமுக
சிற்கன வற்புத மறைமூலா.
செப்பிய பாரத மிப்புவி தனிலுறக்
கைப்பட வெழுதிய வதிதீரா.

எத்திசை யதனிலு மெய்த்திர முடனுனை
சித்தமதினிலினி யகல்வேனே.

இச்சையு மனதினி லச்சமு மறவெழில்
முத்தியு மருள்சிவ குருநாதா. 1

---

## திருவருணை.

தனன தனதான தனனதன தான
தனன தனதான—தனதானா.

மகியிலுருவாகி யிருவினையி லேகி
மனைதனமு நாடி யழிவேனே.

வறுமை பிணி சாடி நிதமு முனையோதி
மனதினிரு ளேக வருள் தாராய்.

சுகிய சுகியாவ ரனைவருள மீதில்
சுடர் வடிவமாகி யுறைதேவே.

சொலு மௌன மோன பரமசிவ ஞான
சுகநிறைவ தான குமரேசா.

## குருவருட் புகழ்.

பகிர் முக விசால வசுரர்குல மாயப்
படை யமரிலேவும் வடிவேலா.
பரை கௌரி வாலைக் குமரி சிவகாமி
பதிவிரதை யாளு மருள்பாலா.
திகிலகல நாளு மடிய னெனை நீயுஞ்
சிறுவயதி லாளு முருகோனே.
ஜெனன துயர் மாளுந் தவமுனிவர் சூழுந்
திருவருணை மேவு குருநாதா. 2

---

## பொது.

தந்த தன தானதன தனதான
தந்த தன தானதன தனதான.

மண்ணிலுருவாகி நித மடவார்கள்
மையல் கொடு வாதையினி—லழிவேனோ
எண்ணியுனைப் பாடி யுளத் தகலாமல்
இறப்பொடு பிறப்பகல—வருள்தாராய்.

விண்ணுலகத்தேவர் துய ரதமாக
வெண்ணி யசுராதியரை—யடுதேவே.
அண்ணல் தனக்கோர் மொழியி னுரையோது
மண்டினவர்க காறுமுக—குருநாதா. 3

---

## சென்னை கந்தகோட்டம்.

தத்த தன தந்தனந்த
தத்த தன தந்தனந்த
தத்த தன தந்தனந்த—தனதான.

சத்திசிவ மும் பயின்ற
சுப்ரமணியஞ் சிறந்த
தற்பா பதம் பணிந்து—வுனைநாடி.
தத்துவ மொடுங்கி வந்த
நிற்குண முளம் புகுந்து
தற்செப லகன்றிலங்க—வருள்வோனே.
அத்தியி னுடன் பிறந்த
நித்திய கடம்பணிந்த
வற்புத குகன் செரிந்த—வமரோர்கள்.

அச்ச மறவும் படர்ந்த
விச்சை யசுரன் குலங்க
ளச்சமரினுங் கடிந்த—வடிவேலா.

இத்தரை யடைந்த ரங்க
ளற்பமு மிடுந் திரங்கள்
இட்டமு மகன்றிருந்த—வடியேனன்.

எப்பவு முளங் கனிந்து
வுற்பன முணர்ந்து நின்று
யெச்சமயமுன் பதங்கள்—புகழ்பாடி.

பக்தியு நிதஞ் சுரந்து
வுத்தம ருடன் கலந்து
பக்குவ முடன் றுலங்க—வருள் தாராய்.

பற்பல வளம் பொலிந்த
சற்கரைப் பழங் கலந்த
பட்டண முறைந்த கந்த—குருநாதா. 4

## வேகு திருப்பதி.

தானதான தனத்தன தனத்த தன
தானதான தனத்தன தனத்த தன
தானதான தனத்தன தனத்த தன—தனதான.

வாரிசூழு முலக த்தினி லுதித்துடல
வாசையா லிவை யனித்திய மெனத்தெரியா
வாழ்வை நாளுமென மனத்தினில் மிகக்கருதி
யதனாலே.

மாதர்மோகம் வந் துரைத்திட வினைப்பகுதி
யோடுகூடி யுளத்தெழு விருத்தியெனு
மாயையா லிருள் மறைத்திட வுனைப்பணியா
தழிவேனோ.

நாரிவாலை யருள்பறை யுமைக்கௌவுரி
சூலிநீலி துரைத்தனி வரைப்புதல்வி
நாமதேவி யளித்திடு மதக்கரியி
னிளையோனே.

ஞானஞேய மிலக்கியர் தவத்தினர்கள்
யோகர் கால முரைத்திடு மகத்துவர்கள்
நாடுமோன பதத்தினை யெனக்கருள
வருவாயே.

வேறிலாது வுனைப்புகழ் தமிழ்க்கவிதை
பாடியாடி யிறப்பொடு பிறப்பகல
வேத நாலு முடிப்பொரு ளகத்துணா
வருள் தாராய்,

வேடமாறி மடக்கொடி வனத்துறையு
மாதுகாதல் குறத்தியை யணைத்து மயில்
மீதுலாவு சுகத்தெருள் முகிற்கருணை
முருகோனே.

போரி லாறுமுகத் தொடு காத்திலகு
வேலையேவி யிடர்ப்படு சுரர்க் குறைகள்
போகவே யசுரத்திர ளனைத் தொழிய
வடுதீரா,

போதநீடு திருத்தணி மலைப்பழனி
யாரூர் வேளூர ருணைப்பதி திருச்சுழியல்
போரூர் வேள்விமலைத் திருப்பதியி லொளிர்
குருநாதா. 5

## பரங்கிரி.

---

தனன தனதான தனனதன தான
தனன தனதான தனதான

கருவி னுருவாகி வினை வழியி லேகி
  கழலுமட மாத ருறவாலே.

கலவி சுகநாடி பிணிகள் பலமூடி
  கவலை பெரிதாகி யழிவேனோ.

செருவி லெழு சூரர் குலமழிய வேலை
  சிறு வயதிலேவு முருகோனே.

சிறுமை துயராதி வறுமைகளு மோடி
  தினமு முனை யோத வருள்தாராய்.

குருவினுப தேச மதனில் விசுவாச
  குணம தகலாத பெரியோர்கள்.

கொளுமவுன மோன பரமசிவ ஞான
  குமர னருளான மயில்வீரா.

சருவ வுலகோரு மடி பணிய நாளுந்
தமிழ் மறைகள் பாடும் பொழில் சூழும்.
தவமுனிவர் வாழும் பழனிமலை மேவுஞ்
சரவண பவா வென் குருநாதா. 6

---

## சுவாமிமலை.

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன
தனதானு.

ஆறுமுக மோருருவ மாகி குருவாகி வினை
யோட வெனை யோதிநிலை கூட வுளமே மருவி
யாசைதுயர் நோய்குறை யிலாமலடி யேனுலகி
லறிவாகி.

ஆருமறியாத சுக போதநிறை வாகுமுனைப்
பாடி விளையாடி யகலாதிலக வேகருதி
யாளு முருகேச குமரேச னெளியேனு மினி
யகல்வேனோ.

வேறுபடு மானிடர்கள் காணவறிதா யுலகில்
தேவரிட ரேகவெனு மாகருணை யாலமரில்
வேல்கொ டசுராதியர்கள் நீறுபடவேபொருது
மயில்வீரா.

வேத னறியாத பொரு ளோதி முடி தானதிர
சாடியுடனே சிறையி லேகவிடு மேக னுயர்
வேடர் குல மான்மகளை நாடிவன மீதுலவு
முருகோனே.

சீருடைய யோகியர் மெஞ்ஞானியர் தபோதனர்க
ளாரியர்க ளோடரசர் யாவருநே யேபணிய
சீவனிரு ளானமல கோசமற வாழ்வுதரு
குமரேசா.

தேவி சிவகாமி யபிராமி கலியாணி யுமை
வாலை பரமேஸ்வரி மனோன்மணி வராகி யுனை
தேடியிரு மார்பிலமு தேயுதவு நீ பருகு
மிளையோனே.

சாருவகை யானதினி மேலுலகி லேதுமிலை
யானபடி யாலுனது பாதமலர் நீயருளி
தாமதமி லாமலடி யேனுமுன தோடிலக
வருள் தாராய்.

தாலமதிலே சுரர்கள் வீதிபுடை சூழவெழு
கோவி லடைவார் வினைகள் தீர வுருவாகி வளர்
சாமிமலை மீதி லரனுர் செவியிலோதுசிவ
குருநாதா. 7

---

## உடுப்பைச் சுப்ரமணியம்.

தனதனந் தனத்தனந்த
தனதனந் தனத்தனந்த
தனதனந் தனத்தனந்த—தனதான.

கருவி நின்றுதித்துச் சிறந்து
வழுதருந்தி சொக்கிக் கிடந்து
கவனம் வந்திழுக்கத் தெரிந்து
வயதேறி.

கலை பயின்றகத்துட் டுணிந்து
மகளி ரின்பத்திற் புகுந்து
கவலைகொண் டிகத்திற் சுழன்று
மழிவேனோ.

சருவமும் படைத்துத் தகுந்த
விதியையுங் கொடுத்துப் பறந்த
சதுர்முக னுளத்திற் பொருந்த
வருள் ஞானம்.

தனையவ னுறைக்கச் சினந்து
முடிபடக் கரத்திற் றடிந்து
தகு சிறை யடைத்துப் படர்ந்த
குமரேசா.

பொறுமையு மறத்திற் படிந்து
வினையெனும் பவத்தைக் கடிந்து
பொறையுடன் றவத்திற் றுலங்கு
மடியார்கள்.

புகலுமுன் பதத்தைப் பணிந்து
துரியநன் னிலத்திற் றெழிந்து
புனை தமிழ் சுறக்கக் கனிந்துன்
னருள் தாராய்.

மருளருஞ் சுரர்க்குச் சமைந்த
துயர் கெடப் பொறுப்பைப் பிழந்து
வசுரர் தன் குலத்தைச் சிதைந்த
கதிர்வேலா.

மறலியை யுதைத்துச் செறிந்த
பரசிவ னளிக்கச் சுகந்த
மலர் விரி யுடுப்பைக் குகந்த
குருநாதா. 8

---

## திருப்பரங்குன்றம்.

தனத் தனந் தந்ததான
தனத் தனந் தந்ததான
தனத் தனந் தந்ததான—தனதானு.

மறைத்திடுங் கொங்கை யாலும்
விழித்திடுங் கண்களாலு
மயக்கிடுஞ் சிந்தை மாதர்
வசமாகி.

## குருவருட் புகழ்.

மலத்துடன் சென்று நாளு
முனைப்பணிந் தின்புறுமல்
மருள்குணங் கொண் டுலாவி
யழிவேனோ.

உரைத்திடுஞ் சங்க பாணி
யிடைச்சியர் கன்று காலி
வுரித் தயிர் தின்ற சோர
மதனாலே.

உரல் கயற் கொண் டசோதை
யிறுக்கிடத் துன்புறாது
உதித்திடுஞ் சிங்கமாயன்
மருகோனே.

பரைத் திரங் கொண்ட வாலை
யளித்திடுங் கந்தவேளென்
பவத்துயர் என்று மாய
வருள் தாராய்.

பலிக்கொளுஞ் சம்புநாதன்
களித்திடும் விஞ்சை மோனப்
பதப்பொரு ளென்று காதி
லருள்வோனே.

சிறைப்படு மிக்கிராதி
துயர்க்கெட வந்து போரில்
செருக்குருஞ் சிந்தையான
வசுரோர்கள்.

திரள்க்குலம் பொன்ற வேலை
விடுத்து மெய்யன்பர் சூழுந்
திருப்பரங் குன்றமேவு
குருநாதா. 9

---

## திருச்செந்தூர்.

தான தனன தன தந்தனந்தன
தான தனன தன தந்தனந்தன
தான தனன தன தந்தனந்தன—நந்ததான

ஆதி நடுமுடி வகன்று நின்றது
மூலவெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஆறு வதனமொடு வந் துகந்தது
நெஞ்சினூடே.

ஆசையறு மவர்களுண்ட வின்பது
நேச முடைய தவர் கண்டு கொண்டது
வானைமுக னிளைய தம்பி யென்றொரு
கந்தவேளே.

பாதிமதிரவி யணிந்து மன்றினி
லாடு பரமசிவ சம்புவின் சிறு
பால குமார முருகன் குகன் சிறை
கொண்டதேவர்.

பாரி லவர் குறைக ளென்றொழிந்திட
வேலை விடு சமரில் குன்றழிந்துடற்
பாசமுள வசுரர் தன் குலந்தனை
வென்ற தீரா.

நீதியொடு பிரமனும் பரஞ்சுக
மானபொரு ளுணர வென்று மன்பொடு
நேரிலது வினவியுஞ் சிரந்தனி
லன்று சாடும்.

நீலி கவுரி யுமை கங்கை சங்கரி
வாலை புவனை மலை மங்கை சுந்தரி
நீளு முகில் கருணை யென்ற வம்பிகை
தந்தவாழ்வே,

ஓதிமறை மொழிக ளுன் பதந்தனை
தேடி யிரவு பகல் சிந்தை நைந்தொழிர்
ஊமை நிலையி லருள் கொண்டு நின்றிட
வந்து தாராய்,

ஒரு மடியவர்கள் சங்க மும்பெரு
வாரி யலையொலிக ளும் பணிந்திட
வோடும் வினைகள் திருச் செந்தி லம்பதி
யெம்பிரானே. 10

---

## சுவாமிமலை.

தனன தன தான தத்த
தனன தன தான தத்த
தனன தன தான தத்த—தனதானா.

அவனி தனிலே ஜெனித்து
தினமு மடவார் மயக்கி
லழியுமெனை யாதரித்து
நலியாதே.

அடிய ருரவாக வைத்து
கொடிய வினை தானொழித்து
வறிய தமிழோதி வைத்த
குமரேசா.

பவநெறி யுலாவு துஷ்ட
வசுரர் குலம் வேரறுத்து
பதி யமரர் வாழவைத்த
வடிவேலா.

பறை கவுரி வாலை சத்தி
குமரி யபிராமி பெற்ற
பரமசிவ ஞான நித்த
முருகோனே.

தவ நிலை விடாத சுத்த
வுபரதி வைராக்ய சித்த
தனி மவுன மோன முற்ற
　　பெரியோர்கள்.

சரணமென வே துதிகக
வருளுதவு பாத பத்ம
சரவண பவா குறத்தி
　　மணவாளா.

கவலை யணுகா தெனக்கு
வொரு மொழியினை லுணர்த்து
கதியருள் விநோத சுப்ர
　　மணியோனே.

கலைகள் மறை யாகமத்தின்
வுறை புகல் சுவாமி வெற்பில்
கருணை மிகு ஜோதி முத்தர்
　　குருநாதா.　　11

———

## திருப்பரங்கிரி.

தனனந் தன தான தனந்தன
தனனந் தன தான தனந்தன
தனனந் தன தான தனந்தன—தன தானு.

அறமுந் தவமாகி யமர்ந்தரு
ளுதவுங் குமரேச னுளந்தனி
லடியன் குறையாவு மகன்றிட
வருள் தாராய்.

அகிலந் துதி பாடவு மன்புட
னிறைவன் சிலே யேவி யடர்ந்தெழு
மசுரன் குல மாயவு மின்புட
னமரோர்கள்.

திறமுந் தளராமல் வளர்ந்திட
வெனவுங் கதிர் வேலு மணிந்தொரு
திகழுங் குறமாது புணர்ந்திடு
முருகோனே.

தினமுந் தவராது பணிந்துனை
யகமும் புறமாக வறிந்தவர்
ஜெனனங் கெடவே சுகமுந் தரு
மயில்வீரா.

கரவுங் கொலை காம மெனும்பவ
மிரவும்பக லேகி யழுந்திய
கடையென் றுய ரேகவு முன்பத
முடிசூடி.

கலையுஞ் சிவஞான முரைந்திட
வலையும் மன மாயைய ரும்பர
கதியுந் தரு மானை முகன்றன
திளையோனே.

புறமுந் தணலாகமு னஞ்சிறு
நகையுஞ் செயு நாத னறிந்திட
புகலும் வுப தேச சவுந்தர
வடிவேலா.

புகழும் பல நீதி விளங்கிடு
பழனம் புரி மேரு வளம்பதி
பொலியும் பொரு ளாறுமுகஞ் சிவ
குருநாதா. 12

---

ஷை பரங்கிரி.

தனன தானன தானன தனதன
தனன தானன தானன தனதன
தனன தானன தானன தனதன—தனதான

மனதிேைடுற வாகியு மயலொடு
வெனது நானெனு மேயிரு வினையொரு
வடிவமாகிய தாளுன தடி தொழ
வறியாமல்.

வனிதையோ ரிடமே வலுமிருநிதி
தினமு நாடிடு தீனெறி யொடு சில
வறிவிலா ரொடு கூடியு முலகினி
லழிவேனென்.

நினைவிலே யுருவாகியு மகவிரு
ளகலவே தய வாலெனை யடுமை கொள்
நெடிய மாலெனு மாயவனுள மகிழ்
மருகோனே.

நிருதனாகிய சூரனு மவனுட
குலமு னீர்பட வானவர் துயர் கெட
நினது கூர்வடி வேல்விடு மறுமுக
மயில்வீரா.

சனகனாதியர் தானருள் நிலைபெற
மௌனமாய் வட வாலடி நிழலமர்
சகல காரண னாகிய சிவனுமை
புதல்வோனே.

தருண மீதெனை யாளென வடியவர்
யிடைவிடா துனை யேயவ ருளமதில்
சரவணோர் பவ னேசர ணெனுமறி
வுடையார்கள்,

சென்ன வாதனை தீரவு மொருமொழி
யதனை யோதியு மாசையி னசைவர
சிவசொரூப சமாதியு முதவிய
குமரேசா;

நிகழு மாதவ ரானவ றுறைபதி
பழனி மேருவி லேயெழு மதிபதி
சிறிய னேன்றுதி யாவையு மடியணி
குருநாதா 13.

---

## சிவகிரி.

தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன-தனதானு.

கருத்தி லென்றொரு கபடுள வரிவையர்
தனத்தை நெஞ்சொடு தழுவியு மவரிதழ்
கடித்து மின்புறு கலவியி லுலகினி
லலைவேனென்.

கவிக்கு மன்பொடு கடையனை யடிமைகொண்
டகற்றி முன்பவ மருளொரு மொழிநிலை
களிக்க வென் மனமுதவிய சரவண
பவனீயே.

விருத்தவந் தண னுருவொடு ரவிமக
னிடத் தடைந்தவ னெழில் தவ முழுமையு
மெனக் குகந்தளியெனமுன மிலகிய
ரகுராமன்.

மிகுத்த தந்திர னுளமகிழ் மருமக
னனைத்தினும் பரவிய வறுமுக குகன்
விடத்தை யுண்டவ னருளிய கரிமுக
னிளையோனே.

பெருத்த வஞ்சக வசுரர்கள் குலமதை
யழித்து நின்புக ழமரர்கள் துதிசெய
பிடித்திடுங் கரமதி லொழிர் பிரபல
வடிவேலா.

பிறப்பது முடல் பினை யழிவது வெனு
மறைப் பகன்றிடு மடியவ ருனதடி
பெறக்குணந்தனை யுதவியு மதினுறை
முருகோனே.

வெறுத்திடும் புவியசை மறுபடியென
துளத்தி லண்டுவ தழகல வுனதருள்
வெளிக்கு ளென்மன மினியற வரமரு
ளிறையோனே.

விளைக்கருந்தவ நெறிதரு மதிபதி
வுரைக்கு மந்திர மொரு சதுர் மறைமொழி
விரக்திகொண்டவ ரடைசிவ கிரிவளர்
குருநாதா. 14.

---

## ஸ்வாமிமலை.

தான தத்தனத்த தான தத்தனத்த
தான தத்தனத்த தனதானா.

கால சக்கரத்தி லேசுழன் றூரத்து
காம விச்சை பெற்று—வினையாலே.

காத லுற்பவித்து மாதுடன் களித்து
காணுமிச் செகத்து—ளலைவேனென்.

தூல பற்றெனச்சொல் லாவலென் றொழித்து
சோக நிச்சயத்தி—லுறவாகி.

சோர சித்தமற்று சார வுன்பதத்திற்
றூய னிச்சணத்து—னருள் தாராய்.

வேலை விட்டெதிர்த்த சூர வம்மிசத்தர்
வேறு முற்றொழித்து—மயிலேறி.

வேத சொற்படித்து தேவரன்புறத்து
மேவ நிற்குணத்தி—லருள்வோனே.

ஆலமுட் பொசித்த நீலகண்ட னட்பி
லாதி சத்திபெற்ற—புதல்வோனே.

ஆசை துக்கமற்ற சாமி வெற்பிலுற்ற
வாரு வச்சரத்துட்—குருநாதா. 15.

---

## திருவாவினங்குடி.

தான தந்தன தான தனந்தன
தான தந்தன தான தனந்தன
தான தந்தன தான தனந்தன—தந்ததான.

வேதமந்திர நாத பரம்பொரு
ளாய வுங்குறை மாய வெழுந்தமர்
வேலவன் சிவ ஞான சவுந்தர னெந்தநாளும்.

வீர கிண்கிணி யோசை யதிர்ந்திட
வாரமுங் கிரி டாதி துலங்கிட
வேகமஞ்ஞையி லேறி விரைந்தருள்—வந்துதாராய்

கோதகன் றிடு மாதவருந் தொழு
பாத பங்கஜ மாமலரும் புகல்
கோளிதன் கொடி யோடு புறந்தா—னன் றூதேவர்.

கூடி யுன் புகழ் பாடி மகிழ்ந்தருள்
நாடியுஞ் சிவ ஞான மடைந்திட
கோர மிஞ்சிய சூரனெடுங் கிளை—வென்ற தீரா.

போதனங் குரு சேவை மிகுந்திரு
ளேகவும் பர சோதி யெழும்படி
பூதலந் தனி லாறு முகம் பெற—வென் றுவாழும்.

போக வெந்தண லாசை யகன்றிடு
வாத பண்டித ஞன வதந்தியர்
பூரணந் தனை யோர வுகந்தருள்—கந்தவேளே.

ஆதாரம் புவி யாளுமை சங்கரி
மாது வம்பிகை வாலை தூரந்தரி
யார்வல் கொண்டுனை வாரிமுகந்தெமு—மன்பினாலே.

ஆழி யென்றரு ளாரமு தந்தர
நாளுமின்புட னீயு மருந்திய
ஆவினங்குடி மீதில்மர்ந்திடும்—யென்பிரானே. 16.

## ஷை சுவாமிமலை.

தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தனதானா.

வாழை யொத்த விழி யாசை பற்றுமொழி
மாதரிச்சைகொடு வினையாலே.

வாதை பெற்றுழலு பாழ் மனத்தினொடு
வாத பித்த மல முடலாகி.

வேளை யற்றுலக பாச முற்று சதுர்
வேத சப்த நிலை யுணாமல்.

வீணி லுற்பவம தாகி யற்பசுக
மேவி யிப்புவியி லழிவேனோ.

ஊளை விட்டுனது பாத பத்மபுக
ளோதி யெத்தருண மகலாமல்.

ஊமை யச்சரம தான சிற் சொரூப
யோக நிட்டைபெற வருள் தாராய்.

ஏழை பக்தர் துயர் மாய வஸ்த்தமதி
லேவ வெற்றி பெரு வடிவேலா.

ஈகை மிக்க வளர் சுவாமி வெற்பிலுரை
யேக தற்பரம குருநாதா. 17.

## கதிர்காமம்.

*தான தன தன தான தன தன*
*தான தன தன—தனதான.*

வாரி வளை புவி மீதி லிரு வினை
வாழ்வி லென துட லுருவாகி

மாதர் மயல் கொடு காத லெழ மன
வாதையுட னினி யழிவேனோ

நாரி யுதவிய வாறுமுக குக
ஞானமணி யொளி வெளியாகி

நாடு மடியவர் பாசமறவு மென்
நாளு மவருள மடைவோனே.

போரி லசுரர்கள் நீறுபட விடு
போத மிகுசுடர் வடிவேலா.

பூமனொரு சிர மோதியருள னு
பூதி வினவிய முருகோனே.

பாரிலென தறி யாமை கெடவிரு
பாத நருமலர் தரவாராய்.

பாடு மறைகதிர் காம முரைசிவ
பால னெனவரு குருநாதா. 18.

## காஞ்சிவரம்.

தன தாந்தன தான தனுதன
தன தாந்தன தான தனுதன
தன தாந்தன தான தனுதன — தனதானு.

வெளி சேர்ந்திடு பூதல மீதினி
லெழியேன் றரி போலுட லாகியு
மிருள் போன்றிடு மாயையினுலுனை
யறியாமல்.

விழி தாழ்ந்திடு மாதர் விகாரமுற்
றுழல்வேன் றுயர் மாயவு நீ யருள்
விடை யூர்ந்திடு காரிய காரண
னருள் பாலா.

களி கூர்ந்தருள் மாதவர் யோகிய
ரிடர் நீங்கிட வேதுதி பாடியுன்
கழல் தாழ்ந் தகலாதவ றாழ்வினை
கடிதேகி.

கதி சார்ந்திடு மோன மெஞ் ஞானமு
மருள்வோன் குமரேச சடாக்ஷரன்
கனி வாங்கிடு மானையின் மாமுகன்
யிளையோனே.

பழி தாங்கிய சூரனு மேயவன்
குல மாண்டிட வேகதிர் வேல் விடு
பலவான் சம ராபுரி மேவிய
குமரேசா.

பறை சாம்பவி வாலை மனோன்மணி
மலையான் றரு மாதுமை யீஸ்வரி
பலகாலந் தருமா ரமுதே கொழு
மயில்வீரா.

அழி சூழ்ந்திடு பூமல ரோடையும்
வளர் தேங்கெழு மாருத வாடையு
மகில் சாந்தொடு பூக மளாவிய
பொழில் சூழும்.

அரிவோஞ் சிவ யாவென வேதின
மறை நான்குறை யாடிடு மேலவ
ரமர் காஞ்சியின் மாவடி யேவளர்
குருநாதா. 19.

## திருச்செந்தில்.

தந்தத்தனதன தனனு தனனு
தந்தத்தனதன தனனு தனனு
தந்தத்தனதன தனனு தனனு—தனதான.

விந்தைப் புவிதனி லுருவா யடியேன்
வஞ்சிக் கொடி யிடை மடவார் மயலே
விங்குற் றலைவது தகுமோ முறையோ
வினைதானே.

விஞ்சைக் கனிரச மெனு மாதவமே
தொந்திக் கணபதி துணைவா யிறைவா
விண்டுக்குள மகிழ் மருகா குமரா
முருகோனே.

தந்தைக் கொரு மொழி தனை யோதியவா
மங்கைக் குறமகள் கணவா முதல்வா
தண் கற்பக முயர் தருவே நிறைவே
பெருவாழ்வே.

சங்கைப் படு மவருள மீதமரா
கந்தச் சரவண பவனே குகனே
தண்டைக் கொலுசணி யிருதாழ் தானீ
வருவாயே.

எந்தைச் சிறு வயதினி லாழ்பவனே
கும்பத் தெழுமுனி குருவே யருவே
யென் சொற் றமிழுரை யருளே பொருளே
யமரோர்கள்.

இன்புற் றிலகிட வசுராதியறை
வென் றுப் புகழ் சொல விடு வேலவனே
யிம்பர்க் கிரு வினை யறமே னிலைகூர்
வடிவேலா.

சிந்தித் தடியவ ருனையே பணிவா
ரன்பிற் குடி புகு மருமா முகனே
தெங்குக் கமுகுய ரகில் சாந்தொடுமா
பொழில் சூழுஞ்.

செந்திப் பதிவள ரமுதே வொளியே
துன்பப் பிரவிக ளணுகா தெனையே
திங்கள் கதிர் நடுவணை மீதுர
னருள்வாயே 20.

## ௨௰ திருச்செந்தில்.

தந்த தனதான தந்த தனதான
தந்த தனதான தனதான.

மன்றி லுருவாகி சிந்தை மயல்மேவி
மங்கையரை நாடி யுறவாகி.
வஞ்ச மதன் வாழி யஞ்சுபட மோக
வன்பிணியி தாலு மழிவேனோ.
குன்றிடிய மோதி வென்று மசுராதி
கொண்ட துயர் மீழ வமரோர்கள்.
கொன்றை யணி யீச னன்றருள் சர்வேசன்
குஞ்சரி மணாள னுமை பாலன்.
பன்றி யுருவாகி நின்றுமொரு நாளில்
பங்கஜனு நாண வடிதேடும்.
பஞ்சவர் சகாயன் கஞ்சனடு மாயன்
பண்டித விநோதன் மருகோனே.
தென்றல் மிகுசோலை யண்டமுழ மளாவுஞ்
செந்தி நகர் வாழு முருகோனே.
சென்ம வினை யேக வுன்னருள் செய்யோகச்
சின்மய சொரூப குருநாதா 21.

போது.

தனனு தனத்த தனனு தனத்த
தனனு தனத்த தனதானு.

உருவே யெடுத்து மடவார் சுகத்தி
னொடுகூடி நித்த முறவாகி.
வுலகோர் நகைக்க மனமே துடிக்க
வுழல்வே னெனக்குன் னருள் தாராய்.
கருவே ரறுத்து வடியார் தமக்கு
கதியே யளித்து வுளமேவி.
கழலே துதிக்க வறிவே விளக்கு
கனியே வடித்த கதிர்வேலா.
திருமால் தனக்கு மருகா விணக்கி
முருகா வெனச்சொல் யெவரேனும்.
தினமே வுயிர்த்து மனமே நிலைத்து
தெளிவோ டிருக்க வருள்தேவே.
இருவாதை யற்ற வொரு மாதவத்தி
னிலையே பொரித்தி யகலாது.
யெளியே னிருக்க வழியே தெரித்து
வொழியாய் நிறைத்த குருநாதா 22.

## ஷை சுவாமிமலை.

தந்தான தானதன தானன தனுதனன
தந்தான தானதன தானன தனுதனன
தந்தான தானதன தானன தனுதனன—தனதானு.

சிங்கார வேல் குமர தேசிக நமோவென வுள்
ளன்போடு நான் மறைக ளாகமமெலா மறைய
செந்தூரில் வாழ் துரிய நாயக சிவோகமய
வடிவேலா.

செம்பூரு காளிதம தாகமன மாயைபெரு
மென் தாப மூழ்வலிக ளேகிட விசார சுக
சிம்மாச னதிபதி யாகிய சுவானுபவ
முருகோனே.

வெங்காம நீழ் கடலில் வேகமுட னேயணுகி
சந்தோட மாய் வினைகள் தானுருவ மாகிவரு
மின்னுருஞ் சேய் பொருளு மேதினியி லேகருதி
யழிவேனே.

விண்ணுடர் மாமுனி விவேகியர் தபோதனர்க
ளென்னுளுன் ருழ்பணிய வேயவர்கள் மாலகல
விஞ்ஞான மோன நிலை தானருள் சதாவுனது விநோதமய
வருள்தாராய்.

அங்காளி வாலையபிராமி சிவகாமி யுமை
தன்காத லோடு முலை தானு தவ நீ பருகி
யஞ்சாது தேவர்துய ரேக வசுராதியரை
யடுதேவே.

அஞ்ஞான வேரொழிய வாறுமுக மாகியெழு
மெஞ்ஞான மோன பரி பூரண சொரூபனிரு
ளண்டாதுன் பாதமலர்ச் சேவை யகலாதடியே
னடைவேனே.

சங்கோடு தார் துளப நாரண னிராவணனை
பஞ்சாக வோர்பகளி யாலடு மிராமனுளச்
சந்தான மானபரி பூரண மகாபிரிய
மருகோனே.

தண் தேனுமாவு முணவாக குறபடாது தா
வுண்பானு மாயரனுக் கோதியு மகாமுரை
சம்போ சிவாயமென நீயமரர் சுவாமிமலை
குருநாதா 23.

---

## திருவேரகம்.

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன—தனதானு.

தரையில் மானிட னுயுரு வாகியு
மிலகு வேத புராண சிவாகமந்
தமிய னேனுணரா திரு மாயையி
லுறவாகி.

சலனமே தரு மாதர்கள் மோகமுற்
றலகை போலலை யாதுயர் வாழ்வெனுந்
தவ சிவோகம தாகிட வேயுன
தருள்தாராய்.

நிரையு மோன மெஞ்ஞானிய ரானவ
ரடை சுகோதய வாறுமுகா குகன்
நிபுண போத சொரூப நிராமய
முருகோனே.

நிமலி சூலி வராகி மனோன்மணி
குமரி காளி யுமா பர மேஸ்வரி
நிரு விகாரி பராபரை யாள் தரு
புதல்வோனே.

சிறையில் வேதனை யாதியிலே விடுத்
தொருவரால் முடியா துயர் கேதியை
செயு விநோத க்ருபாகர சோவித
மயில்வீரா.

செருவிலே யசுராதிய ரோடமர்
பொருது கூர்வடி வேல் விடு சேவகன்
சிவ குமார நமோவென வேயுன
தடிதாளும்.

பொரையுளார் துதி பாடிடவே தின
மவர்கள் தீவினை யாவுமிலா தற
புகலு மோர் மொழி தானருள் தேசிக
விறையோனே.

பொதிகை வாழ்முனி தேடிய பூரண
கடவுள் நீயருள் காரிய காரண
பொழில்கள் சூழ்திரு வேரக மேவிய
குருநாதா 24.

## கஞ்சிக்குமர கோட்டம்.

*தந்த தனன தனனு தன தனன*
*தந்த தனன தனனு தன தனன*
*தந்த தனன தனனு தன தனன--தனதானு.*

சிந்தை யதனி லடியே னறிவையர்க
ளின்ப வழியி லுறவே வளர வெரி
செந்தி யணுகு புழுவே யெனவு மன
மிகவாடி.

செங்கல் மனைகடனமே யடைய மயல்
கொண்டு மடைய ருடனே பழகி நிதஞ்
சென்று மவர்பின் னுலகே துணையெனவு
முடலாகி.

எந்த விரத தவமே யிதை யமதி
லொன்று மிலது வவமே யுளதெனக் கொண்
டிங்கு வுளலு மெனையே யடுமை கொள
வுருவாகி.

யென்று முயிர்களுடலே கரணமிவை
மன்றிலுளது மலவே மறைபுகலு
மிந்த வறிவு பொருளே யுணரெனவு
மெனையோகி.

பந்த விகா முடனே கவலை பிணி
துன்ப வெகுழி வினையே யகலவு மென்
பண்டை மலமு மறவே பதமருளி
யெனையாளும்.

பஞ்ச முகம துடையான் குல வசுரர்
துஞ்ச வமரி லடுவா னமரர் சிறை
பங்க மொழிய விரைவாய் மயிலின் மிசை
வருவோனே.

கந்த முருக குமரா கலையுதவு
மங்கை மருவு மழகா நெடிய மலற்
கண்ண னருமை மருகா கரிமுகவ
னிளையோனே.

கண்டு பணிய வுனையே பழ வடியர்
தொண்டு புரிய முறையே சுகமுதவி
கஞ்சிக் குமர பதியே வொளி ரெனது
குருநாதா 25.

---

## ஷை காஞ்சிவரம்.

*தந்த தந்த தனத்த தனதன*
*தந்த தந்த தனத்த தனதன*
*தந்த தந்த தனத்த தனதன—தனதான.*

கண்ணை மன்றிற் கவிழ்த்துப் புருடர்க
ளெண்ண மென்று மிளுக்கு மறிவையர்
கண்ணி தன்னுளொடுக்கும் பரவைக
ளதுபோலே.

கண்டு நெஞ்சிற் களித்துப் புகுந்திடர்
கொண்டு நைந்து குரித்துப் பழவினை
கட்டிலன்று கலக்கத்துடன் பிணை
யடியேனை.

அண்ணல் வந்து மகிழ்ந்துத் துயர்கெட
யென்னை யன்ப ரிடத்திலிருக்கச் செய்
தண்ட பிண்ட மனைத்து மிகுத் தொளி
ரறிவாகி.

வங்க லிங்க மைக்ய பதத் தொரு
சங்கையின்றி தனித்து நிலைத்திட
வன்று மின்று மெனக்குன் னருள் தரு
முருகோனே.

எண்ணி யுன்னை யிசைத்துப் பலகலை
மண்ணில் நின்று வழுத்து மவர் வினை
யென்று முள்ளத் தனைத்து மொழித்திடு
மயில்வீரா.

இட்ட சித்தி யெனக்கு வுதவிமுன்
றுட்டர் தம்மைத் தொலைத்து வமரர்கள்
யித்தரைக்குளி ரண்டு பதந்தொழ
வருதேவே.

வெண்ணெ யுண்டு புவிக்குட் டனஞ்செயன்
சொன்ன வொன்றை முடித்துச் சமர்தனில்
வெற்றிகொள்ள விடுத்த ரதத்தரி
மருகோனே.

விச்சை துக்க மரைப்பு மகன்றிடு
கச்சி யென்னுந் தலத்தி லமர்ந்துயர்
மெய்த் தவத்தர் பணிந்து புகழ்ந்திடு
குருநாதா 26.

## சமராபுரி.

தானந்தன தான தனதன
தானந்தன தான தனதன
தானந்தன தான தனதன—தன தான.

வேதம் புகல் மாதவர் யோகியர்
தேடுஞ் சிவ ஞான தயாபர
வேளென் குறை யாவு மிலாதற
வருள் தாராய்.

வேலுங் கொடு சூரனுமே யிரு
கூறுஞ் செயுமாறு முகா குகன்
வேகம் பெரு மா மயிலேறிய
முருகோனே.

ஏதந் தரு பூமியிலே பல
நாளுந் தரி போலுடலா யடி
யேனும் பொரு ளாசையின வினி
யழிவேனோ.

யேகம் பொரு ளோமெனு மோர் மொழி
வாசம் பொதி காசல மாமுனி
யேவும்படி தானருள் தேசிக
விறையோனே.

வாதம் புரிவார் துரியோதன
னோடும் பல சேனையு மாழ்கிட
வானுங் கடல் நூள்படு பாரத
மதிலேகி,

மாவுங் கடு கேகிட வேவிடு
மேகந் தளிர் மேனியனு மறி
மாயன்றிரு மாலுள மே மகிழ்
மருகோனே.

போதம் பெருவார் தனை யேதின
மாளுங் குமரா'குகனே சிவ
போகந் தமியே னுற நீயுன
தடிதாராய்.

பூவுங் கமழ் சோலை யளாவிய
கோதொன்றில தான சுகோதய
பூணுஞ் சமராபுரி மேவிய
குருநாதா 27.

---

## கழுகாசலம்.

தான தனதன தான தனதன
தான தனதன—தனதான.

வேத விசார சுகோதய பூரண
வேக நிராமய—முருகோனே.
வீர மயூரம தேரி யுலாவிய
வாறுமுகா வுன—தடியே னன்.
பூத வகோர விகார தராதல
போக விடாமய—லதனாலே.
பூவையர் மோக மராவிட மேகொடு
போர்மத வேழ்கணை—யழிவேனோ.
நீத பராபர போதமகா தவ
ஞேய குகா புய—வடிவேலா.
நீலி சடாதரி வாலை மனோன்மணி
நேமி பராபரை—யருள் பாலா.
வாத விரோத மனோலய மாயுனை
யோத விராகனுன்—னருள் தாராய்.
வானவர் யோகியர் ஞான தபோதனர்
வாழ் கழுகாசல—குருநாதா 28.

## சுவாமிமலை.

தான தனத்தன—தான தனத்தன
தான தனத்தன—தனதானு.

பூமியி லுற்பவ மாகியிடர்ப்படு
போக சுகத்தினை—மிகநாடி.
பூவையரைத் தின மே மருவிச்சுடு
போர் மதன் கைக்கணை—யழிவேனோ.
காமிய மற்றிட வேயரு ளற்புத
காரண சற்குரு—வடிவாகி.
கால னுதைத்திடு மா மவுனப் பொருள்
காண வுணர்த்திய—முருகோனே.
வாமியருள் சிவகாமி யுமைப் பரை
வாலை மடக்கொடி—யபிராமி.
வாரி யெடுத்திரு கீர சமுத்திர
மார்பி லணைத்திட—வருதேவே.
சாமி மலைக்குடி வாச மகத்துவ
தாளென் முடித்துணை—யதனாலே.
தாச னுளத்தினி லாசை யினித்தொட
ராம லெனக்கருள்—குருநாதா 29.

## பழனிமலை.

தந்தன தந்தன தான தனந்தன
தந்தன தந்தன தான தனந்தன
தந்தன தந்தன தான தனந்தன—தனதானா.

சந்தண குங்கும வாடை யணிந்திடு
மங்கையர் கொங்கையி லாசை மிகுந்தெழு
சஞ்சல மிஞ்சிய நா யடியன்றனை
மறவாமல்.

சங்கர னும் வுபதேச முணர்ந்திட
வந்தருளுங் குமரேச னிதம்புகழ்
சந்திர விம்ப மதாறு முகம்பெற
வருள்தாராய்.

அந்தர துந்துமி யோசை யதிர்ந்திட
பந்தமுடன் றுயர் பாரி லகன்றிட
வைங்கர னுந் துணையாக வமர்ந்திட
வெகுகோடி.

அண்டரு மிந்திர னுநி வளர்ந்திட
கொண்டிடு வெஞ்சின ரா மசுரன் குல
மன்றழியும் படி யாக வளர்ந்திடு
மயில்வீரா.

மந்திர சுந்தரி வாலை துரந்தரி
யந்தரி சங்கரி யாளுமை யம்பிகை
மைந்த னெனுங் குமரேச சவுந்தர
வடிவேலா.

மன்றினி லுன்பத மாதவருந் தொழ
வென்று முளந்தனி லேயரு ளின்பருள்
வஞ்சி யெனுங் குற மாது புணர்ந்திடு
முருகோனே.

சிந்தையி லுன்புகழ் தீவிரமுங் கொடு
வன்ப ரகம்புர மாக வரிந்தொளிர்
செந்தமிழ்க் கொண்டுனை யோத வரந்தரு
மிளையோனே.

தென் பழனம்புரி மேரு விளங்கிட
வென் பவமுங் கெட வேயெழு சுந்தர
சின்மய நின்மல மோன துரந்தர
குருநாதா 30.

## திருமயிலம்

தனன தனத்த தனந் தானதன
தனன தனத்த தனந் தானதன
தனன தனத்த தனந் தானதன—தனதான.

அருளை யுரைத்தவ ரன்பாலா குற
மகளை யணைத்துவருஞ் சீலா தொழு
மடிய ருளத்தி லமர்ந் தாளா சூர
ரனுகூலா.

அசுரர் குலத்தை யடுங் காலா சதுர்
மறைக ளுரைக்கு மலர்ப் பாதா வினை
யகல வெனக்கு வரந் தாவா சுடர்
வடிவேலா.

கருணை மிகுத்த கடம்பா நீ யென
தறிவை விளக்கு மகம் போதா மனக்
கரண விருத்தி யுடன் கூடா தவ
ரிறையோனே.

கரிவி யடக்கு மருந்தே ஞானிய
ரறிவை விளக்கு மகம் போதா மனக்
கவலை தணிக்க வெனுந் தாரா புனை
மணிமார்பா.

இருளை யகற்ற வெழும் பானே பர
நிலையி லமர்த்த நினைந்தோனே சுக
மெழிய னெனக்குந் தருவோனே புக
ழுடையோனே.

யிமைய மலைக்கும் மகள் தாளாலுள
மகிழ வெடுத்து மகன் சோரா திரு
விலகு தனத்தி னுடன் பாலை தர
வளர்வோனே.

மருள ரணைத்து நிதங் காணு தொளி
ரகில வுயிர்க்கு ளகந்தாணு மணி
மரண முதிப்பு மகன் றோயா தரு
ளுருவாகி.

மவுன பதத்திலி ரண்டா துனை
யணுகு மவர்க்குன் னருளோயாதெழ
மயில நிலத்து ளமர்ந்தோனே சிவ
குருநாதா 31.

---

## திருச்செந்தூர்.

தனனந் தன தந்த தனத்தன
தனனந் தன தந்த தனத்தன
தனனந் தன தந்த தனத்தன—தனதானா.

விரியும் புவி தன்னி லுருக் கொடு
பொரியுங் கரணத் துளலைப் படு
விடையந் தனிலென் று வசப்படு
மயலாலே.

விசனம் பல வென் னு ளுரைத்திட
நிசமுந் தவ நிட்டை வெறுப்புற
விகாரங் கொடு வித்துய ரத்தினி
வழிவேனோ.

கரியும் பரி யென்ன நடத்திய
பரமன் றரு முன்னை யுளத்தினில்
நணுகும் பொரை யுள்ள சமத்துவ
ரிறையோனே.

நாவும் பொழி கின்ற திருத்தணி
யுரையும் பொரு ளென்ற னகத்திருள்
நலியும்படி யுன்றனருட் டர
வருவாயே.

குறியுங் குண மென்று மொழித் தரு
விரவும் பக வின்ப மிகுத்திட
குகனுன் சரணென்று துதித்திடு
மடியார்கள்.

குறையுங் கெட வந்த சுரத்திர
வழியும் படி யன்றமரைத் தொடு
குமரன் சிறை கொண்ட மரைக்குலப்புக
வமரோர்கள்.

செறியும்படி தென்னை யகிற்பல
தருவுங் கமழ் தண் மலரைத் தரு
செடியுந் தளிர் கொண்டு புகழ்ச்சொலும்
வழியாலே.

திரையுங் கடல் தன்னிலுதித்த நின்
முரையுஞ் சொலி யுன்ற னடித்தொழ
திகழுந் திருச்செந்தி நகர்ச்சிவ
குருநாதா 32.

## திருப்போரூர்.

தனன தன தான தந்த
தனன தன தான தந்த
தனன தன தான தந்த—தனதான.

புவியி லுடலாகி வந்து
யிரு வினையி னுலழிந்து
புவன மட மாதர் தங்க
ளுறவாகி,

புல னுணர்வி லேநுழைந்து
கலவி சுக மேபுகுந்து
பொருளை மிக வே நினைந்து
மழிவேனோ,

கவியி லுனை யோதுகின்ற
புலவர் விழியா யமர்ந்து
கருணை யுருவாகி நின்று
மடியார்கள்,

கவலை கெட வேயெழுந்த
பலகலை சிவாய மந்திரக்
கவன மணி நாத கந்த
வடிவேலா,

செவியி லெனை யெமொழிந்து
வரமருள வேதுணிந்து
தெருவி லெனை யாளவந்த
குமரேசா.

சிறுமை கெட வேநினைந்து
வொரு நொடியி லோடி வந்து
செனன பிணி மாய வுந்த
னருள் தாராய்.

மவுலி தனிலே புனைந்த
மதி ரவியு மாட நின்ற
வரனுதவு பாலனெந்த
னிறையோனே.

மறையவர்கள் சூழுகின்ற
சமரபுரி யாள னென்ற
மவுன பதமே நிறைந்த
குருநாதா 33.

—

## திருச்செங்கோடு.

தானதன தானதன—தானதன தானதன
தானதன தானதன—தனதானா.

ஆறுமுக மாகியொரு—சூரனுடல் சாடியவ
னுவி மயிலேறி வரு—முருகோனே.
ஆசை பெரிதாகி நிதி—காசை யெதிர் காணவெகு
ஆவலொடு கூடியினி—யழிவேனோ.
சோறு பொருள் கூறையென—வீடுதொரு மேவி மயல்
தோகையர் கண் மீதினினிப்—படலாமோ.
சோலை மலை யானதும்—விராலிமலை மீதிலுயர்
சுவாமி மலை யாளவரு—வடிவேலா.
பாருலகெலாமுனது—தாழ்பணிய வானவர்கள்
பாதமலர் தூவ வெழு—குமரேசா.
பாதிமதி சூடிநட மாடுமொரு—தேவனருள்
பாலனெனு மானைமுக—னிளையோனே.
வேறுபடு நீள் வினைகள்—சாறுவகை யானதினி
நீறுபட வேயுனது—வருள் தாராய்.
வேதமொலி பாடுகொடி—மாடநிறை செங்குன்ற
வெற்பினடி யொப்பில் வளர்—குருநாதா 34.

## திருத்தணிகை.

தனந்த தான தனதன தனதன—தனதானா
தனந்த தான தனதன தனதன—தனதானா.

துறந்த கோலம் வுனைநினை சிந்தைய தொடுநாளுந்
துலங்கு வேலு முனதடி மலர்தொழு திடவாரும்
பறந்து நீயு மளியென வந்தொரு மொழியாலே
பதிந்த ஞானந் தருகுரு பரசிவ—முருகோனே.

கறந்த பாலுங் கனியொடு சீனியதென நாளுங்
கனிந்தமோனம் பெருதவ யோகிய ருளமேவுஞ்
சிறந்த நாடும் மலைவளமுஞ் சதுர் மறையோதுந்
தெளிந்த போதந் தருதிரு தணிகையிற்—குருநாதா 35.

---

## வெஞ்சமாக்கூடல்.

தந்தத்தான தனந்தன தானன
தந்தத்தான தனந்தன தானன
தந்தத்தான தனந்தன தானன—தனதானா.

வஞ்சக் காதல் மடந்தையர் தீநெறி
கொண் டுச்சாகமுடன் சிறியேனினி
மன் றுள் போக நுகர்ந்தறி யாதுனை
யழிவேனோ.

வந்துச் சேரி லழுந்திய வாரென
பந்தபாச பவந் தொடரா திரு
வம்பற்றோர்க ளகந் தனிலே யுரை
முருகோனே.
நெஞ்சத் தோறு மலங்கெட வேயுனை
சிந்தித் தோதிட செந்தமிழாற் றுதி
நின் பொற்பாத மிரண்டையு நீ தர
வருவாயே.
நின்றுப் போரி லெழுந் தசுராதியர்
பொன்றத் தேவர் புரந்தர ரோடுள
நிந்தைச் சோப மொழிந்திட வேல்விடு
மயில்வீரா.
கஞ்சத்தோனு முகுந்தனு மாதியி
லஞ்சச் சோதி யடங்கலு மாயொளிர்
கண்டத்தால விடங்குடி யாகிய
பரமேசன்.
கண்டுப் போத முறும்படி யோர் மொழி
விண்டுக்காதில் விளங்கிய மாமணி
கம்பத்தோடி வருங் கருணாகர
னுமைபாலன்.

விஞ்சைக் காறுமுகந் தரு வேதிய
னும்பற் றேவ னுகந்தெனை யாள்குகன்
வின்சொற் பாடி நிதம் பணிவார் வினை
பொடியாகி.

மிஞ்சித் தாக மடைந்திட வேயரு
ளன்பர்க்கான வகம் பொழில் சூழ்திரு
வெஞ்சக் கூட லமர்ந்திடு மாதவ
குருநாதா 36.

---

திருநள்ளாறு பவானி.

தான தனத்த தனந் தனதன
தான தனத்த தனந் தனதன
தான தனத்த தனந் தனதன—தனதான.

ஆசை மிகுத்து மடங்கிடா தெழு
பாச வினைக்கு ளழுந்தியே மட
வார்கள் சுகத்தை நினைந்தா மய
லதனாலே.

ஆல விடத்தை யறுந்துவோன் சிவ
பால னனைத்தும் படர்ந்தளாவிய
வாறு முகத்தென் னகம் பெரா தினி
யழிவேனோ.

மாசை யொழித்து மனஞ் சுகோதய
நேச முறத்து நிதம் பராபர
மான வுனக்குள் மடிந்தெளா வகை
யருள்வாயே.

வாலை யொருத்தி மகிழ்ந் தளாவென
நீலி துரைச்சி நெடுந் தயாபரி
வாரி யணைத்து முகந் துலாவிட
வருதேவே.

பூசை முடித்து நிதங் குகாவென
வோது மவர்க்குன் பதஞ் சதாதரு
போத நிலைத்துப் புலன் படாதவ
ரிறையோனே.

போரி லெதிர்த்துப் புலம்பி யோடிய
தேவர் பதிக்குள் சிறந்து வாழ்ந்திட
பூமியனைத்து நடுங்க வேல் விடு
மயில்வீரா.

காசை யொழித்துக் கலங்கி நாடொரு
மாது பிறக்கு மகன் சகோதரர்க்
காத விழுக்கப் புகுந்த தாகிய
முழுமூடர்.
காண விளிக்கித் துலங்கிடா தொளிர்
சோதி தருக்கள் சுகந்த மாமலர்
காவு சிறக்குந் தலம்பவானியுள்
குருநாதா 37.

---

போது

தனதன தனதன—தனதன தனதன
தனதன தனதன—தனதானா.

திருவள ரறுமறை—முடியினில் நடமிடு
சிவகுரு பதமலர்—தனைநாடி.
தினமுள முருகிய—சிறு சுதனறிவில
னொரு மொழி யனுபவ—முணர்வேனோ.
இருமுலை கயல்விழி—யதுகொடு புருடர்க
ளிருதய மதுகவர்—மடவார்கள்.
யிதழ் கடித்ததி லெழு—புலல் கமளருசியை
யினிதொடு பருகியு—மிருள் சூழ.

தெருவினி லடியனு—மலைவது சரியல
சிவனடி யவர்பழி—யுரையாரோ.

திகழ் பிரணவ சுக—சரவண பவகுக
திரிபுரை யுமையவள்—புதல்வோனே.

நிருமல முடைய ரடிதொழு—மறுமுக
னின்தரு ளெனதுள—மகலாமல்.

நிறை பா துரியம திரு—வினையற நடு
நிலைதனி லிலகிட—வருள்தாராய். 38.

---

## பழனிமலை.

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான.

மனது பலவித மயலொடு புவிதனி
லுலவு மறிவையர் சுகமொரு பொருளென
வறுமை பிணியுட னணுகி யினிதுய
ரடைவேனோ.

மலமு மிருவினை தொடர்பு மறவுன
தடி யென் முடிபட வுதவி வுயர் தவ
மவுன நிலைதனி லிலக வுனதருள்
தருவாயே.

சென்ன மரணமு மகலுமடியவ
ருனையு முளமதில் நினையு மவரொடு
சிவனு மொரு மொழி யுணர வுரைசெய
முருகோனே.

செரியு மமரர்கள் துயர மதுகெட
வெனவு முலகவர் துதிகள் பெருகிட
சினமு மசுரர்கள் குலமு மறவிடு
வடிவேலா.

எனது சிறு சுதனெனவு முமையவள்
குமரி யெழு விருபுவியு மதிலுரை
யெதிக ளனுபவ முதவு பயிரவி
யபிராமி.

இதைய மகிழ்வுட னுனது பதமலர்
வருடி முலை யமுது தவ மழையென
யினிமையுட னதுபருகு மறுமுக
மயில்வீரா.

சனகர் குலமகள் தனையு மருவிய
பனக சயனம துளப மணிபவர்
தவளு முகில் நிறமுடைய முராஹரி
மருகோனே.

சகல மறைமொழி பகரு மறிவுள
ரடரு நதிவல முடைய மலை பல
தருவு மலர் பொழி லிலகு பழனியிற்
குருநாதா 39.

---

## திருவாலவாய்.

தான தந்த தனன தனதன
தான தந்த தனன தனதன
தான தந்த தனன தனதன—தனதானா.

ஆதியந்த மிலாத சுகோதய
பாச பந்த விநாச நிராமய
வாதவன் சிவ ஞான மகாதவ
முருகோனே.

ஆசையும் புகல் தேகாபி மானமுந்
தாகமும் பசி யாகார நேசமு
மாணுவஞ் செயு மாகாமியங் கொடு
மழிவேனோ.

நீதியும் பல நூலாய் விவேகமும்
வாதகன் றனையே நாடு போதமு
நேர்மை கொண்டடி யாரோடு வாசமு
மகலாமல்.

நீடு மின்புட னேதேனு நேரிடு
மூளருந்தி யுள் ளேகானு போகமுஞ்
ஞேயமும் பெறவே நாளு நீயருள்
தருவாயே.

சோதி யம்பிகை வாலை மகேஸ்வரி
மேரு தந்த வராகி மனோன்மணி
சூலி யந்தரி நீலி புராதனி
யபிராமி.

சோக மிஞ்சிக் குமாரா குகாவென
வாரியன் பொடு வாசா மகோசர
தூய னுன்பத மார்போ டௌாதுர
வருவோனே.

கோதிறந்து சிவாய நமோவென
வோதுகின்ற விராக முளார் தமை
கோச வெந்துயர் கூடாத வாழ்வருள்
மயில்வீரா.

கூறு தெங்கு பிலாவொடு வாழையும்
பூகமுங் கமழ் மாமலர்ச் சோலையுங்
கூடு செந்தமிழ்க் கூடலுள் மேவிய
குருநாதா 40.

சிதம்பரம்.

தனனு தனந் தனத்த
தனனு தனந் தனத்த
தனனு தனந் தனத்த—தனதானு.

கருவே புகுந் தூரத்து
வினைநே ருடம் பெடுத்து
கலையா யிரம் படித்து
மொழியாதே.

கனலே படும் புழுக்க
ளதுபோ லழிந் துநித்தல்
கநியா யினம் புலிக்கு
ளலைவேனோ.

அருள் மாதவஞ் சிறக்க
சுக சாதனம் படைத்த
வடியார் தினந் துதிக்க
மயிலேறி.

அமரோர் படுந் துயர்க்கு
வடிவே லுடன் றெடுத்து
வசுரோர் கடன் குலத்தை
யடுதேவே.

மருளே கடிந் தெனக்குன்
னிருதாழ் பணிந் திருக்க
வரமே தருங் குறத்தி
மணவாளா.

மனமே குவிந் திருக்கு
விளியா யமர்ந் துளத்தில்
மலமே யறும்படிக் குன்
னருள் தாராய்.

குருவா யரன் செவிக்கு
ளுபதேச முங் கொடுத்த
குமரா முகுந்தனுக்கு
மருகோனே.

குளிர் காவனஞ் செழித்த
புவியார் தினம் பெருக்க
குகனே சிதம்பரத்திற்
குருநாதா 41.

## பழனபுரி.

தனத்தந் தந்தன தான தனதன
தனத்தந் தந்தன தான தனதன
தனத்தந் தந்தன தான தனதன—தனதான.

மனத்தின் வஞ்சக மாதர் விகாரம
தாத்தெதன் நெஞ்சினி லாழ்வினை யாலினி
மகிக்குள் பஞ்செசன நாயடி யேனுல
கழிவேனோ.

வனத்திற் சென்றுரை வேடுவர் மான் மகள்
தனத்தைச் செங்கையினால் வரு டித்தின
மணைத்துச் சுந்தர மா மயிலேறிய
முருகோனே.

சினத்தில் மிஞ்சிய தீயசு ராதிய
ரணைத்தும் பொன்றிட வேகதிர் வேல்விடு
திறத்தன் னம்பிகை வாலை மனோன்மணி
யபிராமி.

தெருள்கண் சங்கரி தேவி மகேஸ்வரி
யளிக்குஞ் சண்முக வாவொரு மாமொழி
சிறக்கும் பங்கச னார்முடி சாடிய
குமரேசா.

கனத்தன் வெந்துயர் மாயவு மேயுனே
நினைத்துஞ் சிந்தையி லேகுக வாவெனக்
களிக்குஞ் செந்தமி ழாலுனை யோதவுன்
னருள் தாராய்.

கறத்தின் சங் குடனே சுட ராழியும்
பிடித்துக் கஞ்ச னிராவண ணாதியர்
களத்திற் றுஞ்சிட வேயடு மாயவன்
மருகோனே.

தினத்துஞ் சம்பு குமார நமோவென
வளுத்து நெஞ்சினுள் மாதவர் யோகியர்
செருக்குஞ் சஞ்சல மான தரும்படி
யுருவாகி.

செழிக்குஞ் சந்தண மோ டகில் மரபல
தருக்கள் விண்புகு சாதி மலர்ப் பொழில்
சிறக்குந் தென்பழ னாபுரி மேவிய
குருநாதா 42.

## ௬ பழனிமலை.

*தனன தனதான—தனன தனதான*
*தனன தனதான—தனதானு.*

விரியுலக மீதி—லொரு வுருவமாகி
வினை வழியி லேகி—யிருள் மூட.
விளி கவிழு மாதர்—படுகுழியில் வீழ
விகா மொடு நாளு—மழிவேனே.
கரிய முகில் மேனி—யரி மருகனென
கடவுள் முகமாறு—முடையோனே.
கவுரி யுமை வாலை—புவனை யபிராமி
கநி யருள் வராகி—யருள்பாலா.
மறை யமரர் வாழுஞ்—சிறை யகல நீயும்
வரு மசுரர் மாய—வடியோடே.
மருவு கதிர் வேலை—விடு முருக நாம
மவுன சிவ ஞான—குமரேசா.
நெறியுடைய மோன—துரிய நிறைவான
நின்தடியில் வாழ—வருள் தாராய்.
நிதி வளரு நாடு—பழனிமலை மேவு
நிறை தவ மெய்யோகர்—குருநாதா 43.

## பொது.

தத்தன தனதனந்த தக்தன தனதனந்த
தத்தன தனதனந்த—தனதான.

முத்தர்கள் விடா துணர்ந்த
வித்தக சிவாய மந்திர
முச்சித விராக சிங்க
முருகோனே.

வுற்பன விசார கந்த
வற்புத னிராச துங்க
னுர்ப்பவ மிலா தெழுந்த
குமரேசா.

சத்துவ சொரூப சந்த
னித்திய னுமா பயின்ற
தத்துவ வதீத னென்ற
மறைமூலா.

தற்புக ளிலா தொழிந்த
விர்ப்பன விவேக ரின்பத்
தர்ப்பர வினச பந்த
மயில்வீரா.

சித்தமு முலாவ மன்றி
னிச்சையும் விகாரம் வந்து
சிற்சுக முறாது நின்று
மழிவேனோ.

சித்தியு மகா தவங்கள்
பெற்றுள நிராசை யின்பத்
திறபுகு மனோ திடங்க
ளருள்வாயே.

உத்தம மிலா தகன்று
துர்க்குண மெலா மடைந்து
வுள் பகையரா திருந்த
வசுரோர்கள்.

ஒக்கவு மிலா தொழிந்து
திக்குக ளெலாம் புகழ்ந்து
வொப்புயர் விலாது நின்ற
குருநாதா 44.

---

ஷ போது.

தனன தனத்த—தனதான
தனன தனத்த—தனதான

உடலை யெடுத்தும் மடவார்க
ளுரவு மிகுத்து வொகு மோகக்

கடலி லகப்பட் டிவை நாளுங்
கதியி தெனக் கெட்டழிவேனே.
நடனவாற்கு முபதேசம்
நவிலு கடப்ப மணிமார்பா
கடவு ளெனக்குன் னருள் தாராய்
கமல மலர்த்தாள்—குருநாதா 45.

---

## ஷ்டி போது.

தனத்தத் தான—தனதான
தனத்தத் தான—தனதான.

செனித்துக் காணச்—சுடுமாதர்
செகத்துள் பாசத்—துரவாலே.
அனித்தப் போகத் தினை—நாடி
யகத்திற் சோகத்—தழிவேனே.
தனித்துப் பேதைச் சிறியே—னுன்
றவத்திற் கூடத்—துணைவாராய்.
முனிக்குப் போதத்—தருள் ஞான
முணர்த்துச் சோதிக்—குருநாதா 46.

## திருவருணை.

தனனதன தான தான
தனனதன தான தான
தனனதன தான தான—தன தானா.

தரையி லுடலாகி மூடும்
பவனெரியி லேகி மாதர்
தரு விகார மோக தாக
மதனாலே.

சலன மன தாசை நீள
பொருளை மிக நாடி யோடி
தவ நிலை கொளாது வாடி
யழிவேனோ.

சிறையி விடு தேவர் மீழ
வசுரர் குல மாய வேலை
செருவில் விடு கோல நீல
மயில்வீரா.

சிவனு முயர் வேத சார
முணர விரு காதிலோது
திகழ் மவுன மோன ஞான
முருகோனே.

பொரை யுதவி யேழையே னுன்
னடிய ருறவாகி நாளும்
புகழுனது பாட நீயுன்
வருள்தாராய்.

புனித குமரேச நேச
னரி மருகனுன யோகப்
பொதிகை முனி வான மேக
விடுதேவே.

பறை கெவுரி சூலி நீலி
குமரி யபிராமி நேமி
பதிவிரதை வாலை தேவி
யருள்பாலா.

பல சமையர் காணொணாத
சரவண பவா சிவாய
பதி யருணை யாழ் விநோத
குருநாதா 47.

## சிவகிரி.

தனதன தனத்தத் தனந்த
தனதன தனத்தத் தனந்த
தனதன தனத்தத் தனந்த—தன தாண.

தெருவளர் புவிக்குள் பிறந்து
மிருவினை வசத்திற் படிந்து
தினமு நின் பதத்தைப் பொருந்த
வறியாமல்.

தெரிவையர் மயக்கி புகுந்து
பொருள் தனை யுளத்திற் பரிந்து
தெளிவற நினைத்துப் புலம்பி
யழிவேனோ.

மருளெனு மிகத்தைத் துறந்து
பவ்னெறி விடத்தைக் கடிந்து
மவுன நன் னிலத்திற் றுலங்க
வருள் தாராய்.

மறையவர் துயர்க்குச் சினந்து
வசுரர்கள் குலத்தைப் பிளந்து
மயில் தனையடக்கிப் பொருந்து
வடிவேலா.

தருவடர் புனத்திற் றிரிந்து
குறமக ளிடத்திற் புணர்ந்த
சரவண பவர்க்குச் சுகந்த
மலர்தூவி.

சரணெனு மவர்க்குத் தொடர்ந்த
முமலமு மகற்றித் தெளிந்த
தவநிலை யளித்துச் செரிந்த
குமரேசா.

ஒருமொழி யெனக்குத் துணிந்து
வருளிய திறத்தைப் புகழ்ந்து
வுனதருள் துதிக்கப் புரிந்த
முருகோனே.

வுமையவள் தனத்திற் சுரந்த
வருளமுதினைக்கற்றருந்தி
வெரளிர் சிவகிரிக் குள் படர்ந்த
குருநாதா 48.

போது

தந்த தன தந்த தன—தன தானா.
தந்த தன தந்த தன—தன தானா.

இன்னில மதென் னுடல் வந்—துருவாக
யின்ப மகன் றன்ப மயல்—தனிலேகி
பொன்னி னொடு பெண்ணை யுள—மிகநாடி
புந்தி யலைகின்ற தொரு—வடியேனுன்
சென்னி தனி லுன்னடி யென்—றகலாமல்
சிற்பரம வற்புத னுன்—புகழ்பாட
மன்னு மிரு மின்னனையு—மணிமார்பா
வந்தெனது சிந்தை யருள்—குருநாதா 49.

---

கழுகுமலை.

தனன தன தானதந்த
தனன தன தானதந்த
தனன தன தானதந்த—தனதானா.

அவனி தனிலே பிறந்து
வினை வழியி லேபுகுந்து
வறிவையர்க ளாசை கொண்டு
மதனாலே.

அலை மனதி னுலுழன் று
வருமை பிணி யால் மெலிந்து
வடிய னுனையே மறந்து
மழிவேனோ.

சிவ நம சிவாய வென் று
வனுதினமு நான் மொழிந்து
திகழ் மவுன மோன மென் று
மகலாமல்.

சிறுமை துயர் பாச பந்த
மெனை யணுகிடாமல் வந்து
திருவடியில் வாழ வுந்த
னருள் தாராய்.

கவலை யுட னேகிடந்த
வமரர் சிறை மீழவென் று
கறமதனில் வேலணிந்து
வெகுகோடி.

கலக வசுராதி தங்கள்
குலமழிய வேசினந்த
கவுரியுமை யாள் பயின்ற
முருகோனே.

நவ நிலையு மேகடந்து
வருளுருவ மாயமர்ந்து
நலியு முடல் தான் மறந்த
வடியார்கள்.
நணுகு முயர் வாகிநின்ற
கழுகுமலை மேலெழுந்து
நலமருள் விநோத கந்த
குருநாதா 50.

---

## திருப்பரங்கிரி.

தனத்தந் தான தனந்த தனந்தன
தனத்தந் தான தனந்த தனந்தன
தனத்தந் தான தனந்த தனந்தன—தனதானா.

செழிக்கும் பூமியில் வந்து நிதந் துயர்
விளைக்கும் பாவைய ரின்ப மடைந் திடர்
செருக்குங் காம மிகுந்து மனந்தனி
லழிவேனோ.
செலுத்துங் காரண விஞ்சை யெனும் பொரு
ளளிக்குந் தேசிக னன்பர் பதந்தொழ
சிறக்குஞ் ஞான சவுந்தர சின்மய
முருகோனே.

பழிக் கஞ்சா தவர் பந்த மலந்தனை
வளர்க்குந் தீவினை வஞ்சக நெஞ்சினர்
பலத்தின் சூரன வன்கிளை பொன்றிட
வடியோடே.

படைச் சென்றேவி புரந்தரனுஞ் சதுர்
மறைக்கண் தேவர் படுஞ்சிறையும் பெரு
பழிப்புந் தீர வெழுஞ் சுக சம்பிரம
வடிவேலா.

களிக்கும் மாதவர் கண்டுணரும் பர
வெழிக்குள் நானென தென்பத கன்றிகக்
கலக்கம் மானவை யென்று மொழிந்திட
வருள்தாராய்.

கறத்தின் மான்மழு கங்கையு மம்புலி
தறிக்கும் வேணியன் சங்கர சம்புவின்
கருத்தன்றே புகமந்திர னன்பொரு
ளுரைதேவே.

அளிக்குந் தேனை யருந்திடவுங் கொடு
விரிக்குந் தாமரை சண்பகமுங் கம
ழகற்றும் வாச மடைந்த பெருந்தவ
ர திருசூழும்.

அசைக்குஞ் சீர்தளி ரன்பொடு வந்தவர்
தமக்கென் றாழ்க டவிர்ந்திடு மென் சொலி
யாற்றுஞ் சோலை யடர்ந்த பரங்கிரி
குருநாதா 51.

---

## திருநெல்வேலி குருக்குத்துறை.

தானதத்த தனத்த தனத்தன
தானதத்த தனத்த தனத்தன
தானதத்த தனத்த தனத்தன—தனதானு.

வாதமற்ற மனத்த றகத்தெழு
ஞான நித்த நலத்த னருள் குரு
வாலை சத்தி யளித்த மகத்துவ
முருகோனே.

மாதர் மக்கள் பணத்தை நிலத்தினை
தேடி யற்ப சுகத்தை யனித்திய
வாத பித்த முடற்குழி னித்துய
ரடைவேனு.

சோதனைத் திற முற்று முனைப்பணி
தாக சித்த மிகுத்து வுதித்தொளிர்
சோக நிச்சய சத்துவ முற்பன
னிறைவாகி,

சோதி தத்துவ னிற்குண நித்திய
வேக னற்புத விற்பன சிற்பர
தூய பொற்பத சத்திய முத்தியு
மருள்வாயே.

நீத சுத்த நெறித்தவ முச்சித
தேவர் பட்ட சிறைப்பய மற்றிட
நேரெதிர்த் தசுரத் திரள் முற்றினு
மடுதேவே.

நீளு மச்ச வனத்தி லிருப்பிட
மான கொச்சை வழுத்து மடக்கொடி
ஞேயம் வைத்து குறத்தி தனைப் புணர்
மயில்வீரா.

பாதகத் துரியச் சகுனிச் சம
ராடு மர்ச்சுண னுக் குர தத்தினை
பாரில் விட்ட சமர்த்த னரித் திரு
மருகோனே.

பாடு நித்த மறைக்குண் முடிப்பொருள்
காண வொற்று கலக்க மனத்திருள்
பாசமற்ற குருக்கு நிலத்தொளிர்
குருநாதா 52.

## திருத்தணிகை.

தனனதன தனனதன தனனா தனத்ததன
தனனதன தனனதன தனனா தனத்ததன
தனனதன தனனதன தனனா தனத்ததன
தனதானா.

அவனி தனி லுருவினையி னுடலே யெடுத்து நித
மனைவிதன மதனையென மனமோ மிகக்கருதி
அலைகடலி னுரைகுமிழி யதுபோ லுதித்து மினி
யழிவேனோ.

அன்பினிடு மெழுகெனவு முனையே நினைத்துருகி
குமரசரவண முருக குகனே யுளத்திலெழு
மடிய னிடர் துயரகல முறையே துதிக்க வுன
தருள்தாராய்.

சிவனுணர வொரு மொழியி னிலையே செவிக்குளுரை
யருமுகவ னமரர்படு சிறையே யகற்ற வென
செருவில்வரு மசுரர் குல மறவே விடுத்த சுடர்
வடிவேலா.

தெருள்மவுன சுகமருளுமுமையாள் வரைப்புதல்வி
பதிவிரதை புவனை திரி புரையா ளணைத்துமிரு
திகழ் முலையி னமுதமழை தறவே யதைப்பருகு
மிளையோனே.

சுவரினிடை வெளியதென நிரைவா யனைத்துயிரி
னகமுரைய மருளுருவ நிதியே வுனைப்பணிய
துரிய பர நிலையுதவு சுகுண குறத்திமகிழ்
மணவாளா.

சொலுமிடையர் மனைகடொரு மிடுபாலுரித் தயிர்கள்
கவரு முகில் நிறமுடைய திருமால் தளத்திலுயர்
துளபமணி யரிமருகன் மயில் வாகனத்தில் வரு
மிறையோனே.

கவனமுட னுனது திரு வடியே சிறத்திலணி
தவமுனிவ ரிருடியர்கள் சிவஞான முத்தரொடு
கழல்மரையி னெலிகளிடி யதுபோலெழக் கிரியி
லுரைதேவே.

கதியுதவு மதிபெருகு மடைவார் பவப்பிணியு
முமலமரு மிருளகலு மொழிவார் கருத்தில் வளர்
கருணையுட னறமுதவு பதியே திருத்தணிகை
குருநாதா 53.

## திருவருணை.

தனனதன தான தான
தனனதன தான தான
தனனதன தான தான—தனதானா.

உலகி லுருவாகி யோடி
யிருவினையி னாலும் வாடி
யுனதருளை நாடி யோத—வறியாமல்.

உதிரமட மாதர் மோக
கலவி மயலாகி நாளு
முழலுமென தாவியான—தழியாமுன்.

கலக மன வாசை மாயை
வகல வெனை யோதி நீயுன்
கழல் பாவ நாயினேனு—னருள் தாராய்.

கருணை நிறைவான மோன
வரிமருகன் ஞானயோக
கடவுளெனை யாழ் விநோத—முருகோனே.

அலகி லறிவாகி வேத
முடியி னடமாடு கீத
வருமுகவ னீத போத—னுமைபாலன்.

அமரர் துயராதி யோடு
பவமொழிய வேலை யேவி
வசுரர் குல மாயநீயு—மடுதேவே.

இலகு மதி சூடி யாடும்
பரமனிரு காதிலோது
மிளைய குமரேச நேச—மயில்வீரா.

இணையடிகள் தேடு ஞேயத்
தவமுனிவர் கூடுவாச
மெழிலருணை யாழ் சிவோக—குருநாதா 54.

---

சமராபுரி.

தனதந்தான தனதன தானன
தனதந்தான தனதன தானன
தனதந்தான தனதன தானன—தனதானா.

அலைகொள் வாரித் துகிலென வேயணி
புவியின் மீதிற் பழவினை யாலினி
வழியும் மாதர்ப் பொருளென வேதின
மலைவேனோ.

அடையுஞ் ஞானத் துணர்வக லாதுனை
பணியும் மோனப் பதமலர்ச் சேவையு
மடியன் பூணக் கருணையி னுனை
தருள் தாராய்.

கொலைகள் காமச் சின வசுராதியர்
மடிய வேலைச் சமர்தனி லேவியுங்
குறைகள் தேவர்ச் சிறைகெட வாழ்வருள்
குமரேசா.

குமரி காளிப் பெருவரை யோன் மகள்
புவனை வாலைத் திரிபுரை யாளுமை
குழவியாகித் தரவமுதே கொழு
முருகோனே.

தொலைவிலாதப் பிணி துபர் மாய்கையு
மகல வேதத் துரை பொருளாயவுந்
துரிய ஞேயப் பரவெழிச் சாரவுன்
னருள்தேவே.

சொலு முன் னுயர்க் குடிதனிலே வுரித்
தயிர்கள் பாலைக் கவர் சுட ராழியன்
துளப மார்பிற் புனை திருமால் மகிழ்
மருகோனே.

கலைகண் தேகச் செயலரு மாதவர்
நிரு விகாரத் தொளிர் மவுனதியர்
கமழ் விநோதச் சமதம யோகிய
ரனைவோரும்.

கதிகள் காணத் தினமக லாதுரை
தருவளாவிக் குளிர் மலர்ச் சோலையுங்
கழல் சிவோகப் பதி சமராபுரி
குருநாதா 55.

---

## திருக்குடந்தை.

தந்தந்தந்த தனந்த தனந்தன—தனதான
தந்தந்தந்த தனந்த தனந்தன—தனதான

அண்டந் தன்னில் விரிந்து தொடர்ந்தெழு
புவிமீதில்

அஞ்சுந் துஞ்சு மகங்கள் மிகுந்தொரு
வுடலாகி

கண்டும் பந்த மடந்தைய ரின்புர
வதநாடி

கன்றுஞ் சொந்த விடம்பொரு ளென்றினி
யழிவேனே.
மண்டுங் கங்கு லெனும் பகை யென்றிடு
மகமாயை
வம்புந் துன்ப மகன்றிட வுன்றிரு
வருள்தாராய்.
பண்டுங் கஞ்ச முறைந்திடு வன்பெரு
முடிசாடும்
பண்புந் தங்கு குடந்தையில் நின்றொளிர்
குருநாதர். 56.

## திருக்கழுக்குன்றம்.

தானதத்த தனந்த தனதனதன
தானதத்த தனந்த தனதனதன
தானதத்த தனந்த தனதனதன—தானதான.

சாகரத்தி லடங்கு மகா தராதல
மீதுதித்து நலங்கள் புகா விரா சத
தாமதத்தின் குணங்க ளராததா விழு
மூலமாதர்.

சாரமற்ற பணங்க ளவா விடோமென
வேயழுத்த மலங்கள் தனல் துராசையிற்
றானுரத்து மயங்கி சதா வியாகுலத்
தழிவேனோ.

ஆகமத்தி னொழுங்கு விடா துலாவிய
வேத சப்த முரைந்த சுகா குகாவென
வாசை வைத்து மொழிந்து பெரா திராதுன
தருள் தாராய்.

ஆதிசத்தி நிறைந்த மனோன்மணி மக
மாயி கச்சை யணிந்த வுமா மகேஸ்வரி
யாளெடுத்து முகந்து சுதா யளாவென
வருவோனே.

நாக சர்ப்ப மணிந்து தனு தனுவென
வாது நிர்த்த முழங்கு மகேச ரானவர்
ஞான வித்தை பொருந்த விடா திதோவென
வருள்தேவே.

நான் முகர்க்கு மொழிந்து சுவானு பூதிகள்
சாடியஸ்த்த மழுந்தக் கிரீட மேல்வடு
நாளு நிற்கப் புரிந்த நிராமயா திரு
முருகோனே.

வேகமுற்றுச் சினங்கள் குபீர் குபீரென
போரெதிர்த்து வடர்ந்த நிசா சுராதியர்
வீழ முற்று மடிந்து சபாசபா சென
வணேவோரும்.

வேலெடுத்து நடந்த புயா சலாமயி
லேற முத்தர் பணிந்து சிவோக மாகிட
வேத வெற்பி லமர்ந்த தபோ பதாசிவ
குருநாதா 57.

---

## குன்னக்குடி

தனதன தந்த தனதன தானன—தனதாந.
தனதன தந்த தனதன தானன—தனதாந.

விணயிரு சென்மப் பிணிகொடு பூமியி
லுருவாகி.

மிகுதுயர் பந்தத் திளமுலே மாதர்க
ளுறவாலே.

மனேதன மந்திப் பகல கலாதுள
மதுநாடி.

மயானூர நெஞ்சத் துணையுண ராதினி
யழிவேனோ.
சினமுடன் வந்தப் பகை யசுராநிய
ரதமாக.
செருவினில் நின்றுச் சுடர்வடி வேல்விடு
மயில்வீரா.
தினை வன மன்றுக் குறமகள் தோள்புனை
மணிமார்பா.
திகழுயர் குன்னக் குடியினில் மேவிய
குருநாதா 58.

---

## திருத்தணிகை.

தானதான தனத்த தனந்தன
தானதான தனத்த தனந்தன
தானதான தனத்த தனந்தன—தனதானு.

ஆசை பாசத் தழுத்து மடந்தையர்
காதலாகிக் கருத்துள் ளிடம் பொரு
ளாவலோடு புவிக்கு ளினந்துய
ரடைவேனோ.

ஆணவாதி மலத்தை யகன்றனைப்
பாடியாடிப் பதத்தி லமர்ந்திட
வாழு மாறு முகத்தன் மகிழ்ந்தருள்
தருவாயே.

ஓசை வேத முடிப் பொருளும் புகல்
தேவர் வாழுஞ் சிறைப் பயமுங் கெட
வோது வேலை விடுத் தசுரன் குல
மடியோடே.

வோய நீயுஞ் சமர்க்கள மும்புகு
சோதி யானைமுகர்க் கிளையன் குகன்
ஊசலாடு மனத்தொளி லென்றினி
யகல்வேனே.

மாசிலாத தவத்த ருடன் கலை
யாயு மோன சமத்தர்களுங் குறை
மாழ நீத னுனைத்தின முந் தொழு
முருகோனே.

வாலை தேவி மடக்கொடி சங்கரி
சூலி நீலி துரைத்தனி யம்பிகை
மார்பினோடு வணைத்து முகந்திட
வருதேவே.

தூசைவாரிக் காத்திற் றிகம்பா
மாதர் நாண மாத்தி லமர்ந்திடு
சோர மாய னுளத்தி லெழுஞ் சுக
மருகோனே.
சோக மோக மனைத்து மொழிந்திடுஞ்
சாதியான மலர் பொழிலும் பல
சூழுஞ் ஞேய திருத்தணி யன்பர்கள்
குருநாதா 59.

---

## திருப்பரங்கிரி.

தனதன தனதன தந்தன தானன—தனதானு.
தனதன தனதன தந்தன தானன—தனதானு.

சரவண பவகுக சண்முகனே யுன
தடிதாழும்.
சதுர்மறை முனிவர்கள் தன்மய மேகிட
வடியேனுன்.
சிரவண மனனமு வுண்முக மாகிட
வறியாமல்.

தினமனை தனமொடு பெண் ணிணைவாகியு
மழிவேனோ.

காவுகள் புலைகொலை கள்மமு மேகிட
வருள்தாராய்.

கலகமு நிறைபல துன்மதியே கொளு
மசுரோர்கள்.

திரணம தென வொரு சின்மய வேல்விடு
முருகோனே.

திகழ் வரை பழனியிற் றன்மதியாய் வளர்
குருநாதா 60.

---

## ௸ திருத்தணிகை

தான தத்தன தானன தானன
தான தத்தன தானன தானன
தான தத்தன தானன தானன—தனதானா.

பாச முற்றுடல் தானெனவே நின
மாசை வைத்தெழு மாதர் விகாரமும்
பாரினுள் பொருள் தேடியு நானினி
யழிவேனோ.

பால னுற்பவ மாகிய தானுனே
தேடி யற்புத மான சுகோதய
பாத பத்ம சிவோகம தாகிட
வருள் தாராய்.

தாச நிற்குண யோகியர் ஞானியர்
வேத விற்பன பாவலர் நாவலர்
சாதனைத் திறமான தபோதன
ருனை நாடி.

சாமி நித்திய பூரண காரண
னுன சிற்பர னேயருள் தாவென
தானுளத்நினி லேநின மேதொழ
வருதேவே.

கோதகற்றிடு தேவர்கள் வாழ்சிறை
மீள வெற்பினை வேல்கொடு சாடிய
கூர் விசித்திர மாமயிலேறிய
குமரேசா.

கோபிக ஸ்திரி யோர் பதிறையிர
மோடு பற்பல லீலையுமே செயுங்
கோசலைச் சுதனுமரி மால்மகிழ்
மருகோனே.

வாசகத் தொளிர் பாரத மாதியில்
கோடொடித்து வுலாவிட வேவரை
வாரணத் திருமாமுக னூர்தன
நிளையோனே.

மாலகற்றிடு வாழை பலாவொடு
சோலை முற்றினுஞ் சூழு நிராமயர்
வாழ்திருத் தணிமாமலை மேவிய
குருநாதா 61.

## ௸ சமராபுரி.

தானன தானன தான தனுதன—தனதானு.
தானன தானன தான தனுதன—தனதானு.

பூதல மீதினி லோருரு வாகியு—மடியேனுன்.
பூவைய ராசையி லேகிய வாவுட—னழிவேனோ.
சாதன நாலையு மேவி நிராமய—னுனைநாடி.
சாமிகுகாவெனை யாளென வேநித—மருள்தாராய்
மாதவர் யோகியர் ஞானியரானவ—ரனைவோரும்.
மால்மருகா வருள் தாவெனவேதினம்—வருதேவே
வேதனையோர்மொழி கூறெனவே சிர—மதுசாடும்.
வீரமயூரம தேர் சமராபுரிக்—குருநாதா 62.

## பழமுதிர்ச்சோலை.

தனன தனத்தத் தனதன தானன
தனன தனத்தத் தனதன தானன
தனன தனத்தத் தனதன தானன—தனதான.

கருவி லுதித்துக் குழல் மடவா ரசை
மயலிலகப் பட் டிருநிதியே கொள
ககன புவிக்குள் பிணி துயரோ டினி
யழிவேனோ.

கவன மிகுத்துத் தொழுமடி யார்வினை
யகல நினைத்துச் சுகமருள் வாயென
கருதுமவர்க்குத் திருவடி தானருள்
முருகோனே.

தெருவி விழுத்துச் சிறியனை யோர்மொழி
வறிய வுணர்த்திச் சுகமய மாகிய
தெளிவிலிருக்கப் பொருள் தனை யோதிய
குமரேசா.

செருவி லெதிர்த்துக் கதிர்வடி வேல்கொடு
வசுரர் குலத்தைப் பொடி படவே யடு
சிறையை விடுத்துச் சரணென வேயுனை
யமரோர்கள்.

மருஙை யகற்றிப் பொதிகையில் வாழ்முனி
தனையு மடக்கிச் சதுர்மறை யாகம
மவுன நிலைக்கத் தமிழ் மறை யோதிய
மயில்வீரா.

மடியிலெடுத்துப் பெருவரை யோன் மகள்
குமரி யணைத்துத் திரிபுரை யாளுமை
வனச முலைக்குட் டாவமுதே கொழு
மிறையோனே.

குருகு நிறைத்துப் காமதிலோர் கல
ணெரிய வனத்திற் பரணதிலே யமர்
குறவர் குலத்துக் கொடிதனையே புணர்
மணவாளா.

குளிரு மாத்துப் பொழிலெழு மாருத
மசையு நிலத்திற் செறி தவ யோகியர்
குடியி னிடத்திற் பழமுதிற் சோலையிற்
குருநாதா 63.

---

## எட்டிக்குடி.

தான தத்தத் தனதன தானன
தான தத்தத் தனதன தானன
தான தத்தத் தனதன தானன—தனதானு.

ஆழி சுற்றிக் குரலெழு பூமியின்
மீதுதித்துக் கயல்விழி மாதர்க
ளாசை வைத்துப் பொருள் மனையே தின
மிகநாடி.

ஆலை புக்கிச் சிதைபடு வேழ் சிலை
தானிகர்த்துப் பல துயரோடினி
யானுவத்திற் செயல் தரு மாயையி
லழிவேனே.

காளி துர்க்கைப் பயிரவி யாமளை
வாலை சத்தித் திரிபுரை யாளுமை
காதல் பெற்றுத் தாவமுதே கொளு
மயில்வீரா.

கால னற்றுத் துயர்கெட வேமுனி
வாழவைத்தப் பரசிவ னோர் மொழி
காணவுற்றுச் செவிதனி லோதிய
குமரேசா.

ஊனைவிட்டுத் தினை முனை யேதுதி
பாடிநிற்கப் பழவினை யானது
மோட நித்தச் சுகமய மாகிட
வருள் தாராய்.

வோது வெற்றிச் சுடர்வடி வேல்கொடு
போரெதிர்த்துச் சினவசு ராதியர்
வோடு ரத்தப் பிணமலை யாகிட
வடுதேவே.

நாழி வைத்துத் தலையணை யாகவு
மோடு சர்ப்பத் துயில் பெரு மாயவன்
நாடு சித்தத் திருநெடு மால்மகிழ்
மருகோனே.

ஞான நித்தப் பெருதவ யோகியர்
தேடி முத்தர்ப் பதமல ரேதொழ
நாளு மெட்டிக் குடியினில் மேவிய
குருநாதா 64.

## திருவொற்றியூர்.

தானதத்த தனத்த தனத்தன
தானதத்த தனத்த தனத்தன
தானதத்த தனத்த தனத்தன—தனதானா.

சேலைகட்டி முகத்தை மினுக்கி யுள்
ளாசை வைத்துப் பணத்தை நிலத்தினை
தீய சொற்கள் வழுத்து மலர்க்குழல்
மடவார்கள்.
சீளிரத்த நிணைக்குட லஸ்திகள்
தோலிரச்சி யுருக்கொ ளனித்திய
தேக விச்சை பிடித்து மினித்துய
ரடைவேனோ.
வேலை விட்டு யெதிர்த் தசுரத்திரள்
மாயவெட்டி மடித் தமரர்ச் சிறை
மீளவைத்த சமர்த்தன ரித்திரு
மருகோனே.
வேத சப்த முடிக்குள் முதற் பொரு
ளான நித்த னகத்தினி லுற்பன
மேவியத்த னைத்தொழு துற்றிட
வருள்தாராய்.

வாலை சத்தி யனைத்து மளித்திடு
சூலி துர்க்கை துரைத்தனி யுத்தமி
வாமி வெற்பின் மகள் புவனைப் பரை
மிகநாடி.

வாரி முத்த மளித்து வுனக்கினி
தேவி சுத்த மனத்தி யுமைப்பரை
மார்பினிற் றரு புத்தமுதைக் கொளு
முருகோனே.

ஆலமர்ச் சிவ னப்பினை யுச்சியிற்
சூடி நட்ட மியற்று மழுப்படை
யான் செவிக்கு ளுணர்த்து மருள் கலை
யருள்தேவே.

ஆசை துக்க மரைபபு மகற்றிடு
நீதி பக்தி நிலத்துள் ளழித்திடு
மாழி வொற்று தலத்து ளொளிற் சிவ
குருநாதா 65.

---

## திருமலை.

தனதன தனதன—தனதான
தனதன தனதன—தனதான.

மனமது கயல்விழி மடவார்கள்
மயல்கொடு வினியுல கழிவேனோ.
சினமற வனுதின முனைநாடி
திருவடி தொழவுன தருள்தாராய்.
வனமதி லுரை சிறு குறமாது
மகிழறுமுக குக வடிவேலா.
பனவர்கள் துயர்கெட வசுரோர்கள்
பகையடு திருமலை குருநாதா 66.

---

## ௸ கழுகாசலம்.

தானதனத்தத் தனதன தன தானன
தானதனத்தத் தனதன தன தானன
தானதனத்தத் தனதன தன தானன—தனதான

தேகமெடுத்துப் புவி தனிலேல மட
மாதர் மயக்கிற் படுமடியே னுனை
தேடி யடுத்துத் திருவடியே தொழ
வறியாமல்.

தீய வினைக்குள் செலு மறியாமையின்
காசு பணத்தைக் கருதியுமே யிடர்
சேரு மனத்திற் பிணி துயரோடினி
யழிவேனோ.

மேக நிறத்துக் கடல் நடுவே துயில்
மாய னரக்கர்க் குலமறவே யடு
மேருவெடுத்துக் குடைதரு மால் மகிழ்
மருகோனே.

வேலை விடுத்துப் பகையசு ராதிய
ராவி மடித்துச் சிறை படு தேவர்கள்
மீள விரக்கத் தொடு மயிலேறிய
குமரேசா.

போக மொழித்துச் சதுர்மறை யாகம
மோதி யுளத்திற் சலன மிலாவனு
பூதி நிலைத்துச் சுகமய மாகிட
வருள் தாராய்.

பூமனிடத்திற் பிரணவ மோர் மொழி
தானுமுரைத்துச் சிரமது சாடிய
போத நிலத்துக் கதிரவனு யொளிர்
முருகோனே.

நாக விடத்தைக் கொளு பரமேஸ்வரர்க்
காதனிடத்திற் புகலரு மாமுகன்
நாடுமவற்குத் துயாறவே செயு
மயில்வீரா.
ஞான முரைத்துச் சின மகல் வேதியர்
கால முணர்த்துப் பெரு தவ யோகியர்
நாளுமுதித்துப் படர்கழு காசல
குருநாதா 67.

---

ஷ சிவகிரி.

தன்தன தனதன தனதன தனதன—தனதான.
தனதன தனதன தனதன தனதன—தனதான.

வினைகொடு புவிதனி லுடல்தனை மருவியு
மடியேனன்.
விழிகவ ரறிவையர் படுகுழி நிலையென
வுரவாகி.
மனையிரு நிதிமக வெனு மனநினை வெழு
மசையாலே.
வறுமைகள் பிணி யொடு சினமிக வினிதுய
ரடைவேனே.

உனை யென துளமதி லனுதின நினைவது
மகலாமல்,
வொளிர் சரவண பவகுக நமவென வுன
தருள் தாராய்.
அனைவரு மடிதொழ வருமறு முகனுயர்
பொழில்சூழும்.
அரகர வென வொலி தரு சிவகிரி வளர்
குருநாதா 68.

---

## திருப்பாண்டிக்கொடுமுடி.

தனன தனதன தனத்த தந்தன
தனன தனதன தனத்த தந்தன
தனன தனதன தனத்த தந்தன—தனதானா.

அவயமுட னுட லெடுத்து மங்கையர்
வுறவு மிகு மய லடுத்து நின்றெனை
யறிய முயல் வதை விடுத்து முன்பவ
மதனாலே,
அசன மொடு துகில் பணத்தை நெஞ்சினி
நினைவி னொடு பல ரிடத்தி லஞ்சியு
மடைய வெனவினி யிறப்ப தென்றொழி
விதுவாமோ,

சிவய நமவென வுளத்தி லன்பொடு
துரிய பரநிலை யுறத்து முன்புகழ்
தினமு முறைசெய வெனக்கு வந் துன
தருள்தாராய்.

செருவி லசுரர்கள் குலத்தையும் பொடி
படவு மமரர்கள் துயர் கடுஞ்சிறை
சிதைய வடு மறுமுகத் துடன் றிகழ்
முருகோனே.

குவியு மலரப னிடத்தினும் பொருள்
வினவி யதினுறை தெரித்து மன்பொடு
குமர னவனுட கருத்தினும் புக
முடிசாடும்.

குமரி பெருவரை மகள் சவுந்தரி
புவனை திரிபுரை யுமைக்கருந் தவ
குழவி யென வமு தனத் தருந்திய
குமரேசா.

திவலை னுரை யலை யுதித் தொடுங்கிய
கடலி னடுவரி யணைக் கொளுந் துயில்
செரியு முகில் கரு நிறத்த னன்புள
மருகோனே.

றினமு மரகர வெனச் சுறும்பின
மொழிய விரிமலர் மதுத் தரும் பொழில்
சிகர கொடுமுடி தலத் துரைந்திடு
குருநாதா 69.

---

## ஷ சிவகிரி.

தன தன தனனா—தன தானா
தன தன தனனா—தன தானா.

கருவினி லுருவா யடியேனுன்
கவர் விழி மடவா ருறவாகி.
பொருள் தனை யுளமே மிகநாடி
புரி தவ மிலதா யழிவேனோ,
செருவினி லசுரோ ரதமாக
திகழுயர் கதிர்வேல் விடுதேவே.
இருவினை கெடவே யருள்தாராய்
யெழு சிவகிரி வாழ் குருநாதா 70.

---

## சிக்கல்.

தானதன தான தத்த
தானதன தான தத்த
தானதன தான தத்த—தனதான.

பாரினுடல் தானெடுத்து
சூது புலை காம முற்று
பாலனுனை யேதுதிக்க—வறியாமல்.

பாவையர்க ளாசை வைத்து
மாயை வசமே யுறத்து
பாச மயலாகி நித்த—மழிவேனே.

நாரி மகமாயி சத்தி
வாலை யபிராமி பெற்ற
ஞானமணி யாயுதித்த—குமரேசா.

நானெனு விகார மற்ற
யோகியர் மகா தவத்தர்
நாடிடு மனுநி முக்த—முருகோனே.

வேறு மனதாசை விட்டு
சாமியுனையே நினைத்து
வேத முடிவான சுத்த—நிலையாகி

மேவி யடியார்கள் பக்தி
நீழ வெழியே யெனக்கு
வீர மயிலேரு கர்த்த—னருள் தாராய்.

போரி லசுராதி முற்று
மாயவடி வேலெடுத்து
பூசுரர் வியாகுலத்தை—யடுதேவே.

பூமன்றியாத வித்தை
யோதி முடி மீதுசூட்டு
போத நிறைவான சிக்கல்—குருநாதா 71.

---

## திருச்செந்தில்.

தான தந்தன தந்த தனந்தன
தான தந்தன தந்த தனந்தன
தான தந்தன தந்த தனந்தன—தனதானா.

வாச சந்தண குங்கும மஞ்சளும்
வீசு மங்கையர் பந்த மலங்கொடு
வாழ்வை நம்பி யிகந்தனிலுந் துய
ரடைவேனே.

வாலை யம்பிகை மங்கை சவுந்தரி
சூலி சங்கரி சுந்தரி யந்தரி
வாரி யன்பு மிகுந்து முகந்திட
வருதேவே.

கோச பந்த மலங்க ளகன்றன
தாவல் மிஞ்சி யகம்பொரு ளென்றெளி
கூடி யின்ப மடைந்து விளங்கிட
வருள்தாராய்.

கோர வஞ்சசுரன் குலமும் பொடி
யாகவுஞ் சுரர் தன் சிறையுங் கெட
கூறுமண்ட நடுங்கிடவுந் தொடு
வடிவேலா.

மாசகன்றிடு மாதவருந் திரி
காலமும் புகல் கின்ற பெருந்தவர்
மாயை மும்மலமுங் கெட நின்றவ
ரனைவோரும்.

மார்பி லன்று கடம்பணியுங் குும
ரேசனுந் தனி ரண்டு பதந்தொழ
மாழ்கவுங் குறை சந்ததமுஞ் செயு
மயில்வீரா.

கேசவன் பர தந்திரனும் புகழ்
மாயனென்ற வைகுந்த முகுந்தனுங்
கீதையின் பொரு ளன்று புகன்றவன்
மருகோனே.
கீத கிண்கிணி சங்க முழங்கிட
வாரி தண்டலை வந்து பணிந்திட
கேடருந் திருச் செந்தியில் வந்தருள்
குருநாதா 72.

---

## ௸ எட்டிக்குடி.

தத்தத் தனதன தனதன தனதன—தனதானா.
தத்தத் தனதன தனதன தனதன—தனதானா.

சத்தத் தலைதரு கடல்வளை புவிதனி—லுருவாகி
சச்சுத் திரிசிய விளி கவரறிவைய—ருறவாலே.
சித்தத் தெழு திரி பஃலமொடு மனைதன—மிகநாடி.
செப்பிப் புகழுன தடிதொழ மாதியி—லழிவேனோ.
பத்தர்க்கிடர் துயர் பிணியொடு வறுமைக—ளதமாக
பக்ஷத்தொடு மயில்தனி லெழு மறுமுக—வடிவேலா.
எத்துக்கினி யலைவது சுகநிலை பெற—வருள்தாராய்
யெட்டிக்குடி தனி லுரை சரவண பவ—குருநாதா 73.

## மதுரை.

தான தனதன தனத்த தந்தன
தான தனதன தனத்த தந்தன
தான தனதன தனத்த தந்தன—தனதானு.

பாரில் வினையுட லெடுத்து வஞ்சக
மாத ருறவது மிகுத்து நெஞ்சினுள்
பாச மயலொடு பணத்தையுந் தின
மிகநாடி.

பாதிமதி முடி தரித்து மன்றினி
லாடு பரசிவ னளித்த வுன்திரு
பாத நருமலர் துதித் தடைந்திட
வறியாமல்.

சேரி லமிழு மும் மலத்துடன் றின
மாடை யசன மென் றகத்தி னின்பொடு
சேரவினி பல ரிடத்தினுஞ் சொலி
யழிவேனோ.

தேக வசையினை விடுத்தருந் தவ
மோடு துரிய நன் னிலத் தெழுஞ்சுக
தேசு பரவெளிதனைப் பொருந்தியு
மகலாமல்.

போரி லசுரர்கள் குலத்தையும் பொடி
யாக வமரர்கள் துயர்ப் பறந்திட
போத னுனைதொளிர் படைத்தொடுங் கதிர்
வடிவேலா,

பூமனொரு மொழி தனைத் தெரிந்திட
வோதியிடு சிறை யுனைப் பணிந் தனு
பூதி பெற வினி யெனக்கு வந்துன
தருள் தாராய்,

காரி பயிரவி யுமைச் சவுந்தரி
சூலி திரிபுரை யவள் சுரந்திடு
ஞான ரசவமு தளிக்கவுங் கொளு
மயில்வீரா.

நாளு மரகர வெனப் புகன்றிடு
கோயி லடியவ ருளத்தி லன்பொடு
நாடு மதுரையின் றலத்துறைந்திடு
குருநாதா 74.

## திருமயிலாப்பூர்.

தத்தன தனதன—தனதான
தத்தன தனதன—தனதான.

சித்திரப் புவிதனி லுருவாகி
செப்பிடு மறிவையர் மயலேகி.
சத்திய சமரச னுனைநாடி
தற்பத நிலை பெரா தழிவேனோ.
நித்திய நிருமல னுமை பாலன்
நிற்குண னறுமுக வடிவேலன்.
புத்தியி லுரைதவ ருள மேவும்
பக்குவ மயிலை யுள் குருநாதா 75.

---

## விராலிமலை

தத்ததன தான தான
தத்ததன தான தான
தத்ததன தான தான—தனதான.

இத்தரையிற் றேக மாகி
கச்சணியு மாதர் மோகத்
திச்சை பல வாகி நாளு—மழிவேனோ.

யெத் தருண மேனு ஞான
பக்குவ நிராசை யோகத்
திட்ட மகலாது கூட—வருள்தாராய்.

உத்தமர்கள் தேடி நாடுஞ்
சிற்பர சொருபனுன
வுற்பன குகாய மோன—முருகோனே.

உள்பகை யாராத சூர
னக்குல மிராது மாய
வுக்ரம வேலை யேவு—மயில்வீரா.

சத்தி சிவகாமி நேமி
துர்க்கை மகமாயி தேவி
சற்குண வுமா வராகி—யபிராமி.

தற்பரையின் மார்பிலூறு
புத்தமுத வாரி நீ கொள்
தத்துவ வதீத னுன—குமரேசா.

அத்துவித சோதி நீதி
பத்தர் குறை தீரனுதி
யட்ட வடி வான வீச—னருள்பாலா.

அக்குமணி நீறு பூணும்
விற்பன விவேகர் சூழு
மற்புத விராலி மேரு—குருநாதா 76.

---

## பொது.

தனந்த தானந் தனதன தனதன—தனதான
தனந்த தானந் தனதன தனதன—தனதான.

தரங்கமோதுங் கடல்வளை புவிதனி—லுருவாகி
தவங்கள் ஞானந் தருகுரு வருள்தனை—யுணராமல்.

கரங்குபோலு மறிவையர் மயல்கொடு—சுழல்வேனுன்
கனிந்த மோனம் பெருமுன தடிதொழ—வருள்தாராய்.

சிரங்கள் சாடிப் பிரமனுக்கோர் மொழி—நிலையோதி
தெளிந் துலாவச் சிறையிடு மறுமுக—முருகோனே.

அரங்கள் சேரு மடியவ ருரைபதி—பொழில்சூழு
மகண்ட ஞேயச்சிரகிரி தனிலொளிர்—குருநாதா 77.

---

## திருப்பதி.

தானன தனதன தனத்த தந்தன
தானன தனதன தனத்த தந்தன
தானன தனதன தனத்த தந்தன—தனதான.

காசினி தனிலுட லெடுத்து மங்கைய
ராசைகள் மிகுமய லடுத்து நெஞ்சினில்
காசொடு துகிலென நினைத் திகந்தனி
லழிவேனோ.

காரண னறுமுக னுனைப் பணிந்தருள்
பாடிட வதிரச தமிழ்ப் பெருந் துதி
காரக லென துள முனைப் பொருந்திட
வருள் தாராய்.

பாசிகள் தனை முன மகற்றி வெண்புனல்
நீயென வருளிய சுகத்த னின்புகழ்
பாலக னறிவில னெடுத் தியம்பவு
மழவாமோ.

பாதக வசுரர்கள் குலத்தையும் பொடி
யாகவு மமரர்கள் துயர் படுஞ்சிறை
பாசமு மறவென விடுத்திடுங் கதிர்
வடிவேலா.

பேசிடு மலைமக ளுனமச் சவுந்தரி
யாரணி திரிபுரை யவள் சுறந்திடு
பேதமி லமுதினை யுளத் தருந்திய
குமரேசா.

பேதைய ரெவரெனு முனைத் தினந் தொழ
வாதனை முமலமு மகற்றி யின்பருள்
பேரறி வுடனுய னரற்கு முன்புகல்
மயில்வீரா.

மாசகல் சமரச மனத்தருந் தவ
யோகிய ரிருவினை யொழித்த விஞ்சையர்
மாணவ னெறிபெரு சமத்தர் சங்கமு
மதிசூழும்.

மாவொடு கதலிகள் பழுத் துதிர்ந்திடு
நிள்பவ மிருவினை யகத்தொழிந்திடு
மானிலமது திரு பதிக்குள் நின்றொளிர்
குருநாதா 78.

———

பழனிமலை

தனனதன தான தான
தனனதன தான தான
தனனதன தான தான—தனதான.

கலக விழி மாதர் மோகப்
படு நரகிலேகி வாசக்
கவலை பெரிதாகி நாளு—மழிவேனே.

கதியருளு மோன ஞான
வறு முகவ னென யோகக்
கழல் பரவ நாயினே னுன்—னருள்தாராய்.

பல கலைக ளோது சில
ரமரர் சிறை மீள வேலை
பகையசுரர் மீதிலேவு—முருகோனே.

பரை கெவுரி வாலை தேவி
குமரி யபிராமி நேமி
பதிவிரதை சூலி நீலி—யருள்பாலா.

அலகை முலை தானு மீய
வுயிர் கவரு நீலமேக
னரியணை விநோத மாயன்—மருகோனே.

அயனு முணராத வேத
முடியி லனுபூதி யோகி
யவன் முடிகள் சாடுநீத—குமரேசா.

பலவு முயர் வாழை தேமா
கனிரசம தோடு மாராய்
பரிமள நல் வாடை வீசு—பொழில்சூழும்.

பரம னடியார்கள் கூடி
சிவ நம சிவாய மோதும்
பழனிமலை மீதுலாவு—குருநாதா 79.

---

ஷை பரங்கிரி.

தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன—தனதான.

விரிக்கு மம்புச மலர் முலை கயல் விழி
படைத்த மங்கையர் மயலுரு படுகுழி
விழத் துணிந்துன தடி தொழு நிலகிட
வறியாமல்.

வினைத் தரும் பயனுடல் பிணி வறுமைக
ளிடர்ப் படுந்துய ரென வெழு முமலமும்
விடுத்து முன் புக ளனுதின மொழிய வுன்
னருள் தாராய்.

எரிக்கும் வெந்தண லென வரு மசுரர்கள்
குலத்தையும் பொடி படவொரு ஞெடியினி
லிசைக்கு மந்திர மறையவர் துயரற
வடுதேவே.

எடுத்தெரிந் திடு கவணொரு கரமதில்
பிடித்திடுங் குற மகள் தனை மருவிய
யிகத்தி லன்பர்கள் மயலற வருள் தரு
முருகோனே.

தரிக்கு வெண்புனல் மதிரவி முடிதனி
லாற்குமுன் பொரு மொழி நிலை யருளிய
தகப்ப னன் குருவென வருமறுமுக
வடிவேலா.

சளக்கை வென்றிடு தவமிகு மடியவ
ருளத் துறைந்திடு சரவண பவகுக
சமர்த்த னன்றயன் மறை யுரை யுணரவு
முடிசாடும்.

உரிக் குடந் தயி ரிடையர்கள் மனைதனி
னெடுத்து வுண்டிடு மெழுமுகில் நிறமுட
லுரல்ப் பிணைந்திட வழு முராஹரி திரு
மருகோனே.

உமைச் சவுந்தரி திரிபுரை மலைமகள்
தனத் தெழுந் சுவை பருகிடு மவள் சுதன்
வெளிர்ப் பரங்கிரி தனிலுரை யிமையவர்
குருநாதா 80.

---

## திருச்செந்தில்.

தனதன தனதன தந்தன தந்தன
தனதன தனதன தந்தன தந்தன
தனதன தனதன தந்தன தந்தன—தனதானா.

திருவறு முகனுனை சிந்தை செய் யன்பர்கள்
பவநெறி வினைதரு பந்தமும் வெந்துயர்
சிறுமைக ளிடர் கெட வந்துன தின்பருள்
முருகோனே.

செகமதி லடியனு முன்பத முந்தொழ
மனைதன மறிவையர் சஞ்சல மிஞ்சிட
தினமய லொடுபிணி கொண்டினி யஞ்சியு
மழிவேனோ.

பெருவரை மகள் சிவ சங்கரி யம்பிகை
பயிரவி திரிபுரை சுந்தரி யந்தரி
பிரளய மென முலை தந்திடவுங் கொளு
மயில்வீரா.

பிரணவ மயனுயர் தந்தி முகன்றன
திளையவ னெனவரு கந்த னெனுங் குகன்
பிரமனை யொருமொழி தன்பொருளுஞ் சொலி
முடிசாடும்.

செருவினி லெழுமசுரன் குலமும் பொடி
படவு நல் லமரர்கள் தன் குறையுங் கெட
திகழ் மலர் கரமதி லுன் படையுந் தொடு
வடிவேலா.

செறிகடல் நடுதுயில் பைந்துளபம் புனை
கரு முகிலுடைய வைகுந்த முகுந்தனுந்
திரிவித வுலகமு வுண்டு வுமிழ்ந்தவன்
மருகோனே.

அருமறை நெறி புகு மந்தணருந் தவ
முனிவர்க ளிருடியர் சந்ததமுந் தொழு
மடியிணை துதி யெளியன் சொலவுந் தின
மருள் தாராய்.

அகிலொடு கமுகுயர் சந்தணமு பனீர்
கதலிகள் பலவு மா விஞ்சியு மஞ்சளு
மடர்பதி தென்றிசை செந்தியில் வந்தருள்
குருநாதா 81.

---

## திருவாவினன்குடி.

தனனு தனந் தனத்த
தனனு தனந் தனத்த
தனனு தனந் தனத்த—தன தானு.

கடல் சூழ்ந்திடும் புவிக்கு
ளிரு வாதை கொண் டுளத்தில்
கழல் மாதவஞ் செலுத்த—வறியாமல்.

கபடே நிறைந் துதித்த
மடவார் சுகந் தனக்கு
கடையே னகம் புரத்து—மழிவேனே.

திடமா யரன் செவிக்கு
ளுப தேசமுங் கொடுத்த
தெருளே முகுந்தனுக்கு—மருகோனே,
சினமே மிகுந் தெதிர்த்த
வசுரோர் குலந் துடைத்து
திகில் தேவருங் கடக்க—விடுவேலா.
அடியேன் பவங்களற் றுன்
னிரு தாழ் தினந் துதித்து
வறிவா யமர்ந்திருக்க—வருள்தாராய்,
அயனுர் தெறிந் துரைக்க
மறை வாசகந் தொடுத்த
வறுமா முகம் படைத்த—முருகோனே.
சுடர் போல லருந் தவத்தில்
முனிவோர் பவந் தொலைத்து
துயர் பாசமுங் கெடுத்த—பெரியோர்கள்.
சுகமா யமர்ந்திருக்க
வளர் சோலையுஞ் சிறக்கச்
சொலு மாவினன் குடிக்குள்—குருநாதா 82.

## திருப்பெருந்துரை.

தானத் தனந்தனன
தானத் தனந்தனன
தானத் தனந்தனன—தனதான.

காணச் சுடுங் கொடிய
நாவிற் சமைந்த விடை
காலிற் சிலம்பணியு—மடவார்கள்.

காதற் படுங் குழியில்
வீழத் துணிந் துலகில்
காமத்துடன் சிறிய—னழிவேனே.

பூணத் தவஞ் சிவமெஞ்
ஞானத் தினம் பழகி
போதச் சுகம் பெருக—வருள்தாராய்.

போரிற் சினந் தசுரர்
மாயப் புரந்தரனும்
பூரித் திலங்கவிடு—வடிவேலா.

நாணிற் பிறந் தொருவன்
மார்பைப் பிளந் துதிரஞ்
சூரத்துடன் பருகி—வுயிர்சோர.

சோகத் திரும் பிரக
லாதர்க் கடங்கல் முடி
சூடச் செயுந் துளபன்—மருகோனே.

நாணப் பவந் தொடரு
வாதைப் படும் பிணிகள்
நானுற்பவந் தொலைய—வெனையாளும்.

நாதக் கடம்பணியு
ஞெயத் தினம் பெரியர்
நாடுப் பெருந் துரையிற்—குருநாதா 83.

---

## திருத்தணிகை.

தனனத்தன தன தான தந்தன
தனனத்தன தன தான தந்தன
தனனத்தன தன தான தந்தன—தனதானா.

கனகச் சுடர்மணி காதல் மங்கையர்
வலையிற் படுமன மாகி வெந்துயர்
கவலைப் பிணி துய ராசை கொண்டினி
யழிவேனோ.

கருணைப் பொருமைக ளோடு நின்றுயர்
மவுனச் சுகநிறை வான வுன்திரு
கழலைப் பணி துதி பாடி யின்புர
வருள்தாராய்.

பனவற் சிரைகெட நீயு மன்பொடு
வசுரர்க் குலமது மாயவுந் திகழ்
படையிற் கதிர்வடி வேல் விடுஞ்சுக
முருகோனே.

பரமற் கொரு மொழி யாதி மந்திர
முணரச் செவிதனி லோது சம்பிரம
பவுசைப் பெரு கும ரேச னுன்புக
ளழவாமோ.

வனசக் குவி முலை மாது சங்கரி
புவனைத் திரிபுரை வாலை யம்பிகை
வரை சற் புதல்வியு மா சவுந்தரி
யபிராமி.

மகிழ்வுற் றுளமதில் வாரி யிங்கித
வமுதக் கடல்தா நீ யருந்திய
மயலிற் றெறிவைய ரோடமர்ந்திடு
குமரேசா.

தனனத்தன தன தான தந்தன
திதி தித்திமி திமி தீதகன்றிடு
தகசெத் தகதிமி தோமெனும்படி
நடமாடும்.

தருவிற் பலவொடு வாழையுங் கமு
கடாச் செடிமலர் வாசமும் பெரு
தணிகைமலைத் திரு மீதிலன்பர்கள்
குருநாதா 84.

---

## திருப்பெருந்துறை.

தானத் தனந்த தன
தானத் தனந்த தன
தானத் தனந்த தன—தனதான.

வேலைக் கடைந்த விழி
மாதர்ப் பெருங் குழியில்
வீழத் துணிந் துலகி—லிடர்மேவி.

வேதத் தரும் பொருளை
நாடித் தவங்களற
வீணிற் றிரிந் துழல்வ—தழகாமோ.

வாலைச் சவுந்தரி கல்
யாணிச் சுமங்கிலி சொல்
வாமித் துரந்தரியு—முனைநாடி.

வாரிக் கரந்தனிலுந்
தேவிச் சுறந்திலகு
மார்பிற் றினம் பருகு—முருகோனே.

ஆலைக் கரும்பெனவு
மோகத் தெழுந் துயர
வாசைப் பவந் தொலைய—வருள்தாராய்.

ஆடர்க் கிசைந்த சிவ
னுருக்கு மின் புதலி
யாரக் கடம்பணியு—மணிமார்பா.

சோலைப் பலன் பெருகு
மாவிற் பழங் கனிய
சூழச் சிறந்திலகு—பொழில்சூழும்.

சூதற் றருந் தவர்கள்
கூடித் தினம் பரவு
தூயப் பெருந் துரையுள்—குருநாதா 85.

## சுவாமிமலை.

தான தான தனத்த தனத்தன
தான தான தனத்த தனத்தன
தான தான தனத்த தனத்தன—தனதான.

ஆழி சூழு மகிக்கு ளுருக்கொடு
மாதராசை மிகுத்து மனத்தினி
லாவலோடு பணத்தை நினைத்தினி
யழிவேனோ.

ஆயு வேத முடிப் பொரு ளுற்பன
மோதி நானு முளத்தி னிருள்கெட
வாறு சோதி முகத்த னுனைத்தொழ
வருள்தாராய்.

பாழிலாத தவத்தர் மகத்துவர்
ஞான யோக நலத்த ரனித்திய
பாச மோக மகற்று சமத்துவ
ரனைவோரும்.

பால ரூப மெடுத் தசுரர் குல
மாயவேலை விடுத்த வுனைத் தினம்
பாடியாடிப் பவத்தை யெழித்திட
வருதேவே.

காளி வாலை சமர்த்தி யுமைப்பரை
ஞூலி தேவி துரைச்சி விலக்ஷணி
காதலோடு காத்தி லெடுத்துனை
மிகநாடி.

கார்கள் போலமு தத்தின் முலைத்தர
நாளுவாய் மடுத்துள் கொளு மற்புதன்
காரணு நீ கடப்ப மலர்ப்புனை
மணிமார்பா.

ஊழிகால முனைப்புகழ் முத்தர்கள்
தேடு மோன திறத்த ருளத்தினில்
ஆணி லாசை விடுத்த மனத்தவ
ரதிசூழும்.

ஊரில் வாழை செழித்து மதுப்பொழி
மா பலாவின் வளப்ப மிகுத்திடு
வோது சாமி மலைக்கு ளொழிற் சிவ
குருநாதா 86.

## திருவாரூர்.

*தனன தனத்தந் தன தானதன*
*தனன தனத்தந் தன தானதன*
*தனன தனத்தந் தன தானதன—தன தான.*

உடலை யெடுத்தும் புவிமீதே யிரு
வினைக ளடுத்துன் னருள் சேராதழி
வுதிர மலத்தின் றசையாலே யெழு
முலைமாதர்.

உறவு மிகுத்துங் கொலை காமாதிகள்
தொடரு மனத்தின் றிரிபாலே யதி
லுழல்வ தெனக்குஞ் சரியாமோயினி
முருகோனே.

மடமை யொழித் தென் னுளமே நீழ்சுக
நிலையி லமர்த்து னெறியாலே யுனை
மதனை துதிக்குந் திறமாரா தின
தருள் தாராய்.

மடியி லெடுத்தும் பரைமா கேஸ்வரிப்
புவனை சுறக்கு மமு தோயா துள
மகிழ வுனக்குந் தரநீயே கொளு
மயில்வீரா.

கடலி னடுச்சென் றுயில் கார்மேனிய
னரவில் நடிக்குந் திருமால் கேசவன்
கருடனெடுக்கும் மரிதான் மாயவ
மருகோனே.

கரியின் முகத்தன் றொரு கோடாலுயர்
மலையி னிடத்தில் வரை சீர் பாரத
கதையை யளிக்குங் கணமானோர் பதி
யிளையோனே.

இடரை விளக்கு மசுரோர் நீழ்குல
மடிய விடுக்குங் கதிர் வேலாயுத
னெளிய னெனக்குஞ் சிறுபோதே சுக
மருள்தேவே.

இலகு தருக்கள் வளர் தேமாவொடு
கதலி பழுக்குங் கனி சாரோடிட
யெதிகள் சிறக்குந் திருவாரூர் வளர்
குருநாதா 87.

---

## உத்தரமேரூர்.

தான தத்தன தானா தானன
தான தத்தன தானா தானன
தான தத்தன தானா தானன—தனதானா,

வாரி சுற்றிய பார்மீதே யுட
லாகி நித்தமு மாகா ராதிகள்
வாழ்வை நத்திய காயே னானுனை—யுணராமல்,

மாதர் மக்கள் தன் னாசாபாசம
தோடு ரத்திரு ளோயாதே மன
வாதை பெற் றறிவாகாதே யினி—யழிவேனோ

காரி சிற்பரை மாகா ளீஸ்வரி
வாலை யுத்தமி யாள் தேவி யுமை
நாரணற் றிருமால் நேர் சோதரி—யபிராமி,

நாளு மஸ்த மதாலே வாவென
வாரி யற்புத மார்பாலே தா
நாவினுள் கொளு வானோர் தாழ்பணி—முருகோனே,

பேசரி லுற்றய ராதே யசு
ராநி முற்றினு மீழாதே யடு
பூமனைச் சிர மீதே சாடிய—மயில்வீரா.

பூசை விட்டக லாதே நானுனை
பாடி நிற்குண பாவாலே சுக
போத முத்தியு நாயேனேகிட—வருள்தாராய்.

ஆரிருப்புய மோடே கானக
மேவியப் பரண் மீதே மான்மக
ளாசை வைத்தருளாலே நீ புணர்—மணவாளா.

ஆகமச் சதுர் வேதா சாரமு
மோது விற்பன ராஞோர் தானிரை
வாய வுத்தர மேரூர் வாழ்சிவ—குருநாதா. 88.

இளையனூர் வேலூர்.

தனதன தனதன தானா தானன
தனதன தனதன தானா தானன
தனதன தனதன தானா தானன—தனதானா

மனத் திரு வினைபுகு வாதாலே பர
நிலைதனி லிலகிட நேராதே யழி
மனைதன மறிவைய ராசா பாசமு

மகலாமல்.

வறுமைகள் பிணிதுயர் வாளுளோ டினி
யலேவது தகுதிக ளாகாதே சுக
மயனுனதடி தொழ வாசா கோசர
னருள் தாராய்.

சினமிகு மசுரர்கள் தீயாலோசனை
யவர்குல மறவிடு வேலா வானவர்
சிறைகெட வருளிய சீலா சோவித
மயில்வீரா.

திகழ் பிரணவ னுயர் மாமேரேடென
விரிகதை வரையொரு கோடாலே யருள்
சிவ கணபதி யிளையோனே மான்மகள்
மணவாளா.

வினவியு மொரு மொழி தானே வேதனை
முடிபட வுயர் கர நீயே சாடிய
விகசித வறுமுக சாமி கோசலை
யருள்பாலன்.

விரிகடல் துயில் திரு மால் கார்மேனிய
னுவண மதினி லெழு மாதி கேசவன்
மிகமகிழுள மருகோனே பார்வதி
யபிராமி.

பனிமலை மகள் சிவ காமியாமளை
திரிபுரை பயிரவி தேவி மார்பினிற்
பகரமு துதவிட நாவாலே கொளு
முருகோனே.

பலவொடு கமுகெழு தேமா வாழைகள்
செறிநில முனிவர்கள் யோகி ஞானியர்
பதி பெயரிளையனூர் வேலூர் மேவிய
குருநாதா 89.

---

## பஞ்சநதம் திருவையார்.

தந்ததன தான தான
தந்ததன தான தான
தந்ததன தான தான—தனதானா.

செண்டு முகை மாதர் காமத்
துன்பமதி லேகி நாளுஞ்
செம்பொன் மனை தேடி வாழ—மிகநாடி.
செந்தி நகர் வாசனென
வுந்த னிரு பாதமோத
சிந்தை தடுமாறி மோகத்—தழிவேனோ.

அண்டர் துயராதி யேகச்
சென் றசுரர் மாய வேலை
வன்று தொடு கோல நீல—மயில்வீரா.

அஞ்சலென நாயினே னென்
பந்தமல மாதி யேக
வன்பு நிறைவான நீயுன்—னருள்தாராய்.

தண்டுளப மாலை பூணும்
விண்டு வறியாதி மூலன்
தன் மருக ஞானயோக—முருகோனே.

தண்டை யணி பாதகீதத்
தொண்டு புரி மோன ஞானத்
தன் மய ரனேகர் சூழ—வருவாகி.

பண்டு மக மாயி வாலை
குண்டலி வராகி சூலி
பண்பினொடு பாலுமீயப்—பெருதேவே.

பங்கசனை யோதுவா யென்
றங்கை முடி சாடி நீதப்
பஞ்ச நதம் வாழ்வினோத—குருநாதா 90.

## திருப்பரங்கிரி.

தந்தந் தந்த தனந்த தனந்தன—தனதான
தந்தந் தந்த தனந்த தனந்தன—தனதான.

மன்றுள் வந்து பிறந்து சவுந்திர—மடவாரை
மஞ்சந் தன்னி லணைந்து சுகம்பெற—வுளமேவி.

பொன்றுந் துன்ப வுடம்பை நிதம் பொரு—ளெனநாடி
புண்கண் சிந்தை மலங்கள் பெருந்துய—ரடைவேனோ.

என்றும் வுந்த னிரண்டு பதந்தொழு—தறிவாகி
யின்பங் கொண்டு தவங்கள் புரிந்திட—வருள்தாராய்.

குன்றுந் துஞ்ச முனைந்து விடுங்கதிர்—வடிவேலா
கொம்புஞ் சங்கு முழங்கு பரங்கிரி—குருநாதா 91,

---

## திருவருணை.

தான தனதன தான தந்தன
தான தனதன தான தந்தன
தான தனதன தான தந்தன—தனதான.

பூமி தனி லுருவாகி நின்றழி
மாதர் மயல்தனி லாசை மிஞ்சியும்
போத நிலைகெட வாதை கொண்டினி
யழிவேனோ.

பூமனொரு சிர மோதி யின்புரு
வேத நெறி முறை யோதி யன்பொடு
போரி லசுரர்கள் மாயுவுந் தொடு
வடிவேலா.

சாமி யெனைச் சிறு போதி லன்பர்கள்
சூழ வதினடு வாயமர்ந் தெனை
தாக முடையவர் கூடுமுன் பத
மகலாமல்.

சாறு மடியனை யாழ வந்தருள்
சோதி யறுமுக தூய னுன்புகழ்
தானு முறைசெய நாளும் வந்தருள்
தருவாயே.

வாமி திரிபுரை வாலை யம்பிகை
சூலி பயிரவி நீலி யந்தரி
வாரி முலைதர நீ யருந்திய
குமரேசா.

வாச நறுமலர் காவனந் திகழ்
வேடர் குலமகிழ் மீதிலன் பொடு
வாது பலவுரை யாடியும் புணர்
மணவாளா.

சோமரவி புனல் தானணிந்திடு
மாதி பாசிவ னருமிங்கித
தூய வொரு மொழி தானுணர்ந்திட
வருள்தேவே.

தோகை மயில் குயி லாடிடுந் தவ
யோகி முனிவர்கள் ஞானமும் பெறச்
சூழு மருணையில் மேவு மன்பர்கள்
குருநாதா 92.

---

## திருச்செந்தில்.

தந்தன தந்தன தனதான
தந்தன தந்தன தனதான.

வஞ்சக னெஞ்சுட னுறவாடும்
மங்கையர் கொங்கையி லழிவேனோ.

சஞ்சலமுந் துய ரதமாக
சந்தத முன்பத மருள்வாயே.

வெஞ்சினமும் பெரு மசுரோரை
வென்றிடவுந் தொடு வடிவேலா.

தஞ்ச மெனுஞ் சிவ னடியார்கள்
தங்கிய செந்தியில் குருநாதா 93.

## திருப்பூவணம்.

தான தான தனத்த தந்தன
தான தான தனத்த தந்தன
தான தான தனத்த தந்தன—தனதான.

வாது பேசு மகிக்குள் மடந்தையர்
காதலாகிக் கருத்துள் ளிடம் பொருள்
வாழ்வை நாடி மனத்தி லினந்துய
ரடைவேனோ.

மாசிலாத தவத்த ருடன் கலை
யாயு மோன சமத்துவ மும்பெரு
வாச ஞான சுகத்தி லிலங்கிட
வருள்தாராய்.

சூது மாயை மிகுத் தசுரான் குல
மாய வேலை விடுத்த சவுந்தரன்
றாய தேவர் தேவர்சிறை பயமுங்கெட
வருதேவே.

சூலி நீலி துரைத்தனி யம்பிகை
வாலை தேவி யுமைப் பரை சங்கரி
சோர் விலாது யெடுத்து முகந்துனை
மிகநாடி.

கோதிலாத தனத்தமுதந் தா
நாளு நீயு முதட்டி லருந்திய
கூறு மானை முகத்தனுடன் பிறந்
திளையோனே.

கோச மாறு மலத்தை யகன்றிடு
யோக ஞான முணர்த்து மருந்தவர்
கூடுமோன சுகத்தை யுளந்தனி
லடைவேனே.

தீது சேரு மரக்கர் குலந்தனை
சூரையாடு திருத்துளபம் புனை
தேக மேக நிறந்த னிதம் புகழ்
மருகோனே.

தீரு மாதி பவத் துயரும் பிணி
மாபலாவும் பழுத்துதிரும் புவி
சேமமான திருப்புவனந் தனில்
குருநாதா 94.

## திருப்போரூர்.

தானன தான தான
தானன தான தான
தானன தான தான—தனதானு.

ஆரிரு தோள்க ளோடு
கூர்வடி வேலை யேவி
யாசையுங் கோபமான—வசுரோர்கள்.

ஆவியுங் காய மாயப்
போர் செயும் வீர தீர
ஞகியுந் தேவர் வாழ—வருள்தேவே.

பாரினுள் மாதர் மோக
மூழ்வினை சூழ நாயேன்
பாசம தோடு கூடி—யழிவேனே.

பாவி யென் சூது வாது
நோய்களு மாவல் தீரப்
பாடவுன் ரூழ் விநோத—னருள்தாராய்.

காரணி வாலை நேமி
யாமளை சூலி நீலி
காரிகை காளி தேவி—யபிராமி.

காணவுந் தேடி வாரி
மார்பினி லூரு ஞானக்
காரெனும் பானு மீயப்—பெருவோனே.

வாரிச மீதுலாவும்
வேதனுள் ளாக மோன
வாழ்வினை யோது நீத—முருகோனே.

வாழையு மா பலாவின்
காவனஞ் சூழ் சிவோக
வாசகப் போரி வாழுங்—குருநாதா 95.

---

## திருவாவினன்குடி.

தானத் தனதன தான தந்தன
தானத் தனதன தான தந்தன
தானத் தனதன தான தந்தன—தனதானு.

காணச்சுடு மட மாதர் கொங்கையி
லாசைப் படு மனமாகி நின்றெழு
காமப் பிணிதனில் மூழ்கியுந் துய
ரடைவேனே.

காதற் கொடு வகலாது சிந்தையி
லோதிப் புக ளுனையோ மெனும் பொருள்
காசுக் கினி யலையா துணர்ந்திட—
வருள் தாராய்.

பாணத்துட னெழு கோப வஞ்சக
சூரர்க் கருவற தேவர் தன் சிறை
பாரிற் றுயர் பய மேகவுந் தொடு
வடிவேலா.

பாதிப் பிறைமுடி சூடிடுஞ் சிவ
னுருக் கொரு மொழி நானெனும் பொருள்
பாலித் தருளுருவா யமர்ந்திடு
முருகோனே.

வாணிக் கிறைவனை யாதி மந்திர
மோதச் சொலியவன் மீதிலன் பொடு
மாசற் றவன் முடி சாடியுந் திகழ்
மயில்வீரா.

வாலைப் பயிரவி சூலி யம்பிகை
தேவித் திரிபுரை யாமுகந் துனை
வாரித் தாமுலை நீ யருந்திய
குமரேசா.

நாணப் பழவினை ஞானமுஞ் சிவ
யோகத் தவமிகு மோன விஞ்சையர்
நாடிப் பதமலர் சேவை கண்டிட
வருதேவே.

ஞாலத் தரு பொழில் வாழையுங் கமு
கோடுச் செழுமலர் வாசமும் பெரு
நாமத்துயர் திரு வாவினன் குடி
குருநாதா 96.

---

## சமராபுரி.

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன—தனதானை.

புவன மீதினிலே யுருவே கொடு
மகளி ராசையி னலடி யேனினிப்
புலேகள் கோபம தாகிய பாதக
னெஞ்சினலே.

புகலு வேத சிவோக மகாதவ
னுனது பாத முராது சதா மனம்
பொருளை நாடி யிராக துவேசமுள்
பொன்றுவேனே.

சிவனு மாதியி லோர் மொழி தானுரை
யறிய நீயு மாராத சுகோதயஞ்
செவியி லோது சிவாய நமா வெனுங்
கந்தவேளே.

சிறியனே னுனையே துதி பாடியுள்
மவுன மோன நிராமய மாகிட
தினமு நீயெனை யாள் குகனே யருள்
வந்துதாராய்.

கவன மோடுயர் தேவர்கள் வாழ்சிறை
யகலவே யசுராதியர் மாயவுங்
கருணை யாலொளிர் வேல்விடு சேவகன்
தந்தைசாமி.

கவுரி நீலி வராகி மனோன்மணி
குமரி காளி யுமா பரமேஸ்வரி
கலச மார்பமுதே தரநாளு
மருந்துவோனே.

உவண மேலெழு நாரணர் கேசவ
னிடையர் பால் தயிரே கவர் மாயவ
னுடைய கார் திரு மேனியனார் மரு
கன் செவ்வேளே.

உணர்வ தான மெஞ் ஞானியர் யோகியர்
முனிவரோ'டுயர் மாதவ ரூழ்வினை
யொழியு மால் சமரா புரி மேவிய
யெம்பிரானே 97.

---

## திருவொற்றியூர்.

தனதத்த தானதன
தனதத்த தானதன
தனதத்த தானதன—தனதான.

மருளுற்ற பாருலகி
லுடல் நித்த மாகுமென
மதிகெட்டு நாரியர்க—ளுறவாகி.

வறுமைக் குள்ளாகி மன
மிடர் துக்க மாசை கொடு
வழிதப்பி நானுமினி—யழிவேனோ.

அருள் பெற்ற யோகியர்க
ளுரை சுத்த மோன பர
வறிவிற் குள்ளே யிலகு—முருகோனே.

அளவற்ற சோதி சுக
நிலை பெற்று வாழவுன
தடிமைக்கு நீயு மருள்—தருவாயே.

இருளொட்டு சூரர் குல
மழிவித்து வானவர்க
ளிடர் துக்க மாயவிடு—வடிவேலா.

இகமுற்று மேயுதவு
பரை சத்தி வாலை யுமை
யிணையற்ற பால் பருகு—மிளையோனே.

தெருள் முற்று மாயனுய
ரரி கிஷ்ண மால் மருகன்
றிகழ் சுப்ரமாமணிய—மயில்வீரா.

திட சித்த ஞானியர்க
ளடர் பக்தி மாமுனிவர்
திருவொற்றி யூரில் வளர்—குருநாதா 98.

## திருச்செந்தில்.

தந்தனந் தான தான
தந்தனந் தான தான
தந்தனந் தான தான—தனதானு.

மன்றினில் தேக மாகி
னெஞ்சி னுள் ளாசை பாச
மங்கையர் காதல் மீறி—யுறவாகி.

வஞ்சக லோப மூடர்
வெஞ்சின ரான வீனர்
வம்பர்க ளோடு கூடி—யழிவேனே.

குன்றடு வீர தீர
சம்பிரம யோக ஞான
குஞ்சரி பாக னேய—மயில்வீரா.

கொன்றையுஞ் சூடியாடுஞ்
சம்புவின் காதி லோது
கொண்டல்தன் மேனிமாயன்—மருகோனே

நின்றொளிர் மோன ஞானத்
தொண்டரை யாழ் விநோத
நின் புகழ் பாட நீயுன்—னருள்தாராய்.

நிந்தை கொள் காமமோகக்
குண்டணி கோள்கள் மாய
நின்றய வால் சிவோக—மருள்தேவே,

சென்றிடப் பாவ நீறுஞ்
சங்கொடு தாள மேழுங்
தென்றலின் வாடை வீசு—பொழில்சூழும்.

செந்தமிழ் வேத மோதும்
பண்டிதர் வாரி சூழுஞ்
செந் திலங் கோவில் வாழு—குருநாதா 99.

---

## திருப்பரங்கிரி.

தானத் தனந்த தன
தானத் தனந்த தன
தானத் தனந்த தன—தந்ததான.

பாரிற் பிறந்து மட
மாதர்க் கயந்தனிலும்
பாசத்துடன் முழுகி—யெந்தநாளும்.

பாடிப் புகழ்ந்து முனே
சேவித் துரைந்திட முன்
பாவத் திறங்க வர—வஞ்சுவேளே.

போரிற் சினந் தசுரர்
மாயப் புரந்தானும்
பூரித் திலங்கவிடு—மங்கைவேலா.

பூவிர்ச் சமைந்த வய
ளுருக் கரும் பொருளே
போதித் தழுந்த முடி—யன்றுசாடும்.

நாரிப் பயின்ற கும
ரேசக் கடம்ப குரு
நாதச் சிலம்பணியுங்—கந்தவேளே.

நாடித் தவம் புரியு
மேழைக் கிறங்கி யொளிர்
ஞானத் தொடுங் கவரு—ளின்றுதாராய்.

தேறித் தெளிந்து சுக
மோனத் தமர்ந் தவர்கள்
தேடிப் பதம் பணிய—வந்துசூழும்.

தேவர் சுகந்த மலர்
தூவித் தினம் பரவு
தேசப் பரங்கிரியி—லெம்பிரானே 100.

---

## திருநள்ளாறு பவானி.

தானத் தன தனன
தானத் தன தனன
தானத் தன தனன—தன தான.

வாதுற்ற நாரியர்கள்
பாசத்திலே மருவி
வாழ்வைச் சதா கருதி—யடியேனுன்.

மாசற்ற நீழ் தவ மெஞ்
ஞானத் துராது பவ
வாரிக் குள்ளே யுழல்வ—தழகாமோ.

சாதுக்கள் மாமுனிவர்
யோகற் றபோ தனர்கள்
சாதிக்கு மோன நிலை—யருள்தேவே.

தானத் தனு தனன
தீதித்த தேகிட முன்
தாதத்த தோமெனவு—நடமாடும்.

கோதற்ற வாதி சிவ
ஞருக்கு மோர் மொழி சொல்
கோலக் கலாப நிற—மயில்வீரா.

கோசத் திராக மல
மாயத் துராசை வினை
கூடக் சுவானு பவ—நிலைதாராய்

ஓதுக்கண் வேத னெறி
சாதிப் பிராமணர்க
ளோடித் தரா தலமு—மடிதாழும்

ஊளைப் பொராது கும
ரேசக் குகாய வெனு
மூரிற் பவானி வளர்—குருநாதா. 101

---

## திருப்பழனி.

தனதன தனதன
தனதன தனதன
தனதன தனதன—தனதானா.

அரகர சிவசுத
சரவண பவகுக
வறுமுக நிதிபர—முருகோனே.

அடியனு முலகினி
லிடர்தரு கயல்விழி
வறிவையர் மயல்கொடு—வழிவேனோ.

சிரவண மனனமு
மனுபவ மெனுமொரு
திகழ்சுக நிலைபெற—வருள்தாராய்.

செருவினி லசுரர்கள்
குலமற வமரர்கள்
திகில்கெட விடுகதிர்—வடிவேலா.

குறவர்கள் குலமகள்
தனைமுன மருவிய
குகனுனை யெனதுள—மகல்வேனோ.

குணிகுண மிருவினை
யகலவு மருணெறி
கொழுமவு னியர்தொழ—வருதேவே.

இரணிய னுயிர்கவர்
துளபமு மணிபவ
ரெனுமுரா ஹரிதிரு—மருகோனே.

யிசைமிகு சதுர்மறை
யொலிதரு முயர்பதி
யெளில்பழ னியில்வளர்—குருநாதா 102.

---

## திருவாரூர்.

தனன தனத்தந் தன தானதன
தனன தனத்தந் தன தானதன
தனன தனத்தந் தன தானதன—தனதான

உலகி லுதித்துன் னருள்சேரா தெழு
மகளிர் மயக்கில் மனமோயா திதி
லுழல்வ தெனக்குஞ் சரியாமோ யினி
முருகோனே.

உணர்வு மிகுத்தென் னிருவாதே கிட
துரிய நிலத்துள் ளுனையே நானுள
முருக நினைக்குந் திறமாரா தின
தருள்தாராய்.

இலகு வரைத் தன் மகள் சீராமனி
புவனி யனைத்துந் தருவா ளீஸ்வரி
யெதிகள் துதிக்குஞ் சிவகாமீ யுமை
யபிராமி.

எனது தவத்தின் புதல்வா நீயென
வமுத மளிக்குந் திருவாயா வொரு
யிணையில் கடப்பம் புனை மார்பா சுடர்
வடிவேலா.

கலைக ளுறைக்குஞ் சதுர் வேதாகம
னெறியி லிருக்குந் திகழ் வானோ ரிடர்
கவலை யனைத்துங் கெடவே யசுரர்க
ளதமாக.

கருணை மிகுத்துன் கதிர் வேலேவிய
முனிவ ருளத்தென் றகலாதே யுரை
கரியின் முகத்தன் றுணைவா சோவித
மயில்வீரா.

அலகை முலைக் கொண் டொரு வாயாலுயிர்
பிரிய மடுக்குந் திருமால் கேசவ
னயனை யளிக்கு மரிநாரா யணன்
மருகோனே.

அடரு தருக்கள் வளர் தே மாபல
கனிக ளுதிர்க்கும் பொழில் சூழ் மாதவ
வடியர் சிறக்குந் திருவாரூர் வளர்
குருநாதா 103.

---

ஷை பழனிமலை.

தனன தன தான
தனன தன தான
தனன தன தான—தனதானு.

சிறுவ னெனை யாளும்
பரம சிவ ஞானத்
திடமருள் விநோதக்—குருநாதன்.

தினமு மலர்த் தூவி
யடியர் தொழ நாளுந்
திகழு முருகேசக்—குருநாதன்.

மருவு தவ யோக
சரவண பவாய
மவுன சிவ ஞானக்—குருநாதன்.

மலரி லுறை வேதன்
றலையில் கரமோதி
மறையி னுரை பேசு—குருநாதன்.

செருவி லசுரோர்கள்
குலமழிய வேலை
சிறு வயதி லேவு—குருநாதன்.

செறி யமரர் வாழுந்
துயரகல நீயுந்
தெளி வருள் சிவோகக்—குருநாதன்.

அரு வுருவ மான
நிலையி லனு பூதி
அருளு முபதேசக்—குருநாதன்.

அற மொளிரு நாடு
பழனிமலை மீது
மடிய னுள மேவு—குருநாதா 104.

---

## உடுப்பை சுப்பிரமணியம்.

தத்தத் தத்த தனத்த தனத்தன
தத்தத் தத்த தனத்த தனத்தன
தத்தத் தத்த தனத்த தனத்தன—தனதான.

இச்சைக் கொத்த முகத்தை மினுக்கியர்
பட்டுக் கச்சை யுடுக்கு முலைச் சிய
ரிட்டப் பட்டு மதத்தை யழிப்பவ
ருறவாமோ.

எட்டிக் கொப்ப வெறுத்து மனத்தினி
லச்சத் துக்க மனைத்து மொழித்திட
வெட்டுத் திக்கு மிசைக்கு முனைத் தொழ
வருள்தாராய்.

லச்சைக் கெட்டு பலிக்கொ ளவர்க்குயர்
சித்தச் சுத்தி யளிக்கு முதற் பொருள்
நத்திப்பற்று மகத்துவ வுத்தம
ரடைதேவே.

நச்சுச் சர்ப்ப மிடற்றி லணிச்சிவ
னிச்சைப் பட்டு முடிக்கு மதிச்சடை
நக்கர்க் குற்பன மச்சொ லுரைத்திடு
முருகோனே.

துச்சப் பட் டசுரர்க் குல முற்றினும்
வெட்டிக் குத்தி மடித்தமரர்ப் படு
துக்கச் சிச்சை யகற்ற விடுச் சுடர்
வடிவேலா.

தொட்டிக் கிட்டி வனத்தி லிருப்பிட
முற்றக் கற்கை மடக் கொடியைப் புணர்
சுத்தச் சத்த மறைப் புகல் சுப்பிர
மணியோனே.

பச்சைக் கொச்சை யிடச்சி மனைத் தயி
ருட் கொள் குற்ற முரல்ப் பிணை யச்சுதர்ப்
பத்துச் சிக்கு மயிர்த் தலையற்றிட
வடுமாயன்.

பச்சத் துக்கு யிலக்கிய வற்புத
வெற்புப் புத்திரி யுத்தமி பெற்றிடு
பத்தர்க் கிட்டு தலத்து ளுடுப்பையிற்
குருநாதா 105.

## திருவருணை.

தனன தன தான
தனன தன தான
தனன தன தான—தனதானு.

சமரபுரி மேவு
குமர குரு ஞதச்
சரண மேன வோது—மடியார்கள்.

சலன மன தாசை
யிரு வினைகள் மாயத்
தனை யுணர நீயு—மருள்தேவே.

அமரி லெழு சூரர்
குல மொழிய வேத
வமரர் துயரேக—விடுவேலா.

அரகர சிவாய
சரவண பவா வுன்
னடிபரவ ஞனுன்—னருள் தாராய்.

குமரி சிவகாமி
கவுரி யுமை வாலை
குடிலை மகமாயி—யருள்பாலா.

கொலை களவு காமப்
பிணிக ளகல்வார்கள்
கொளு மவுன ஞேய—மயில்வீரா.

திமிர மல கோச
மகல வெனை நீயுஞ்
சிறு வயதி லாழு—முருகோனே.

சிவ குமர நாமக்
கடவுள் நிறைவான
திருவருணை யோகர்—குருநாதா 106.

---

## திருமலை.

தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன—தனதான.

இறைக் கலைந்திடு தொழிலெனை யகலவு
முனைத் தினந் துதி பகரவு முணர்வெனு
மிலக்கணந் தனி லமரவு மினியுன
தருள் தாராய்.

இடர்ப்படுஞ் சுரர் சிறை கெட வசுரர்கள்
குலத்தையும் பொடி படவொரு ஞெடியினி
லெடுத் திலங்கிய படைவிடு மறுமுக
வடிவேலா.

உறைக்கு மந்திர சரவண பவ குக
னாற் குகந்தொரு மொழி நிலை யருளிய
வுயர்ப் பெருந் தவ முனிவர்க ளடிதொழ
வருதேவே.

உமைச் சவுந்தரி பயிரவி திரிபுரை
மலைக் கருந்தவ மகளிரு முலை தா
வுதட்டி வின்பொடு பருகிடு மரகத
மயில்வீரா.

மறைக்கு மைம்புல னிருவினை முமலமு
முறத்து நின்றெழு மறிவையர் படுகுழி
மயக்கமுங் கொடு வடியனு முலகினி
லழிவேனோ.

மனத்தி லின்புட னுனதடி யவர்பணி
யியற்றி நன்பொருள் வினவியு மவரொடு
மகிழ்ச்சி கொண் டெதிர் வருவது பருகியன்
னெறியாலே.

விரக்தி கொண்டிரு வினை துயரது கெட
வுளத்தி லுன்பத வினை மலர் தொழுதருள்
வெழிக்கு ளின்புட னுறை சிவ னடியவ
ரதிருஞ்சூழும்.

மிகுத்த சந்தண மகிலொடு பலவெழு
தருக்கள் விண்புகு தலமதி லுயர்பதி
விரிக்கு மம்புச மலர் திருமலை வளர்
குருநாதா 107.

---

## திருத்தணிகை.

தான தனத்தன
தான தனத்தன
தான தனத்தன—தனதானை.

வாரி வளைப்புவி
மீதி லுருக்கொடு
மாதரிடற் படு—மயலாலே.

மாட மணித்திய
காசு பணத் துயர்
வாழ்வை நினைத்தினி—யழிவேனை.

நாரி பரைச் சிவ
காமி யளித்திடு
ஞானமணிச் சுடர்—வடிவேலா.

நாடி யுனைத் துதி
பாடு மவர்க் கருள்
நாளு முணர்த்திடு—முருகோனே.

சோரு துகிற் கலை
யாம லெனக்கு முன்
றூய மலர்ப் பத—மருள்வாயே.

சோக வனத்துரை
மாது குறக்குல
தோகை மயில்ப்புணர்—மணவாளா.

தேறி யருள் சிவ
ஞான முதித்தவர்
தேடு மகத்துவ—முடையோனே.

சீத மலர்ப் பொழில்
சூழ வுதித்திடு
சேம திருத்தணி—குருநாதா 108.

---

## ஷ சிவகிரி.

*தனதன தனதன தனத் தனந்தன*
*தனதன தனதன தனத் தனந்தன*
*தனதன தனதன தனத் தனந்தன—தனதான*

கருவினி லுயிருட லெடுத்து வஞ்சக
மகளிர்கள் மயல்தனை யடுத்து நெஞ்சினில்
கவலைக ளனுதின மிகுத்து மன்றினி
லழிவேனோ.

கசடரு மடியவ ருளத் தெழுஞ் சுக
மயனுன திணையடி துதித் தருந் தவ
கதி பெற வுனதரு ளெனக் குகந்தினி
யருள்வாயே.

நருமல ரணிகுழ லுமைச் சவுந்தரி
பயிரவி திரிபுரை யவள் சுறந்திடு
நலமிகு முலைபமு துளத் தருந்திய
குமரேசா.

நவில் பரசிவ னிறையரற்கு முன்பொரு
மொழி யனுபவ நிலை யுணர்த்து சம்பிரம
நம சரவண பவ னெனப் புகன்றிடு
முருகோனே.

செருவினி லசுரர்கள் குலத்தையும் பொடி
பட வொரு ஞெடியினி லழித்து மன்பொடு
சிறை படு மமரர்கள் துயர்ப் பறந்திட
விடுவேலா.

தினை வன மதிலுறை குறத்தியும் புண
ரறுமுக னடியனென் னகத்தி லின்பருள்
திகழ் மலரய னருள் பெறக் கரங்கொடு
முடிசாடும்.

ஒரு மல மிருவினை யவத்தை யைம்பொறி
தொழிலெனை யகலவு மிலக்கணஞ் சொலு
முணர்வெனு நிலைதனி லமர்த்தி யென் குறை
யதுதீராய்.

உயர் பரிமள மிகு தருக்கள் விண்புத
வருமறை முனிவர்கள் மிகச் சிறந்திட
வொளிர் சிவகிரியெனுந் தலத் துறைந்திடு
குருநாதா 109.

## சிக்கல்.

தானன தான தத்த
தானன தான தத்த
தானன தான தத்த—தனதானா.

பார் மீதிலே செனித்து
மானார்கள் நேச முற்று
பாழான வாசை துக்க—மதனாலே.

பாவான வேத சப்த
மோதா திராக முற்றான்
பாதார சேவை விட்டு—மழிவேனோ.

சூர்மாவ கோர துஷ்ட
மாராத கோப சித்த
சூதான மாயை பெற்ற—வசுரோர்கள்.

தூளாகவே களத்தில்
நீயே கை வேலெடுத்து
சோராமலே செலுத்து—மயில்வீரா.

கார் மேனி மாய கிருஷ்ணன்
நாராயணாய விஷ்ணு
காடேகு ராமனுக்கு—மருகோனே.

காமாதி கோர மற்று
மாராத யோக நிட்டைக்
காளாக வேயெனக் குன்—னருள் தாராய்.

சீர்மேவு தேவி சத்தி
மாகாளி வாலை பெற்ற
சீலா குகா குறத்தி—மணவாளா.

சேல் வாழை யாடு சுத்த
நீரோடு கால்கள் மிக்கத்
தேமா வளாவு சிக்கல்—குருநாதா 110.

---

## ௯ திருக்குடந்தை.

தனன தனத்தத் தனந்த தானன
தனன தனத்தத் தனந்த தானன
தனன தனத்தத் தனந்த தானன—தனதான.

உடலை யெடுத்துக் கடைந்த வேல்விழி
மகளிர் சுகத்திற் புகுந்து வூழ்வலி
வுடைய வெனக்குள் சுகம் பெறுதினி
யழிவேனே.

உணர்வு மிகுத்துத் தெளிந்த ஞானியர்
முனிவ ருளத்திற் பொருந்து வாரிச
முனது பதத்தைப் பெருந் தபோ நிலை
யருள்வாயே.

கடலை யடுத்துப் படர்ந்த சேனைக
ளதனை விடுக்கத் துணிந்து ராவணன்
கருவை யொழித்துச் சிறந்த மாயவன்
மருகோனே.

கவுரி மலைக்குப் பிறந்த மாதுமை
புவனை சமர்த்திப் பெருந் தயாபரி
கருணை மிகுத்துச் சுறந்த பால்கொளு
மயில்வீரா.

நடன வரற்குப் பொருந்த வோர் மொழி
செவியி லுணர்த்தித் துலங்கு நாவலர்
நவிலு கடப்பத் தணிந்த சோவித
முருகோனே.

நணுகு மவற்குப் பதஞ் சதா தரு
குமர னனைத்துள் செரிந் துலாவிய
நயன வொளிக்குப் புலன் படாதரு
ளிறையோனே.

ஆடரு தருக்கள் தொடர்ந்த மாபல
கதலி பழுத்துக் கனிந்த சார்மது
வளிகள் குடித்துத் தினங் குகாவென
யிசைபாடும்.

அசுரர் குலத்தைக் கடிந்து வானவர்
துயர மகற்றத் துணிந்து வேல் விடு
மளவில் தலத்திற் குடந்தை மேவிய
குருநாதா 111.

---

ஷ திருவாரூர்.

தனன தான தானன
தனன தான தானன
தனன தான தானன—தனதான.

தரணி மீதி லோயாத
வறுமை நோய்க ளேவாச
தமிய னேனுன் சீர்பாத—மடையாமல்.

தரு விகார மானார்கள்
மயலில் மூழ்கி யேகாமச்
சலனமாகி நாள் தோறு—மழிவேனோ.

காண மோடு சேராத
மவுன யோக ராஞர்கள்
கருது மோன வாழ்வான—குமரேசா.

கரிய நீல கார்மேனி
மலரில் வேத ஞர் தாதை
கருட வூர்தி மாமாயன்—மருகோனே.

முரணிலாது சீர் ஞான
நிலை விடாது பாவாலுன்
முருக நாமமே பாட—வருள்தாராய்.

முனையில் வீர மாராத
வசுரார் மாய வானோர்கள்
முமல மேக நீயேவு—வடிவேலா.

பரணின் மீதிலே வாச
குறவர் மாது மேல் மோகப்
பரமர் காதிலே யோது—முருகோனே.

பலவு வாழை தேமாவின்
பொழில் குலாவ நால்வேதம்
பகர் விநோத வாரூரில்—குருநாதா 112.

## திருச்சீரலைவாய்.

தனத்தத் தான தனதன தானன
தனத்தத் தான தனதன தானன
தனத்தத் தான தனதன தானன—தனதான.

செனித்துப் பூமியிலே மடவார் மய
லடுத்துக் காம விகாரமு மாயிடர்
சிறக்கப் பாழ்வினை யாலடி யேனினி
யழிவேனோ.

செடத்திற் பாச மிலாதற வேயுனை
நினைத்துப் போத சிவோக மகாதவ
திறத்தைச் சேர விராகமு நீ தின
மருள்வாயே.

அனித்தப் போக விகாரமு மாசைகள்
பிடித்தக் கோப வகோ ரசுரோர் தனை
யழித்துத் தேவர் வியாகுல மேகிட
விடுவேலா.

வரக்கர்ச் சோர விராவண னொடியர்
களத்திற் சாக முனே யடு மாயவ
னகத்திற் கூடி விடா மகிழ்வாகிய
மருகோனே.

வனத்திற் சாகை மனோடிட மேகொடு
கரத்திற் சோர் விலதோர் கவண் வீசிய
வகுப்பிற் பேதமிலா துயர் மான் மகள்
மணவாளா.

வளுத்துச் சூது மகா கதை பாரத
மொடித்துக் கோடு வுலாவிட வேவரை
வகற்றுத் தீது விளையகனோர் தன
யிளையோனே.

தனித்துப்போத சொரூப நிராமய
நிலைக்குட் டோயு மகா தவ யோகியர்
தனக்குள் பேத முராத மெஞ்ஞானிய
ரதிசூழும்.

தருக்கள் சாதி பலாவொடு வாழைகள்
செழித்துப் பூக மளாவிடு மாபொழில்
தலத்திற் சிரலை வாயமர் தாசர்கள்
குருநாதா 113.

---

## திருவேரகம்.

தான தனத்தத் தனனு தனதன
தான தனத்தத் தனனு தனதன
தான தனத்தத் தனனு தனதன—தனதானு.

பாரி லுதித்துக் கயல் நேர் விழிமட
மாதர் மயக்கற் படுவே னிருவினை
பாச வலைக்குட் டுயர் மேவியு மினி
யழிவேனே,

பால னெனக்குச் சிறு போதக விருள்
மாய நினைத்துப் புகலோர் மொழியுரை
பாடவருள் செய் தெனையா ளறுமுக
மயில்வீரா.

போரி லெதிர்த்துக் கதிர்வேல் கொடு வசு
ராதி மடித்துப் புகழ் வானோரிறை
போகி யளித்தக் குழல் மாதொடுவரு
முருகோனே.

பூமனிடத்திற் சதுர் வேதாகம
மோதி யிடித்துச் சிறை வாளென வனு
பூதி நிலைக்கத் தயவா லருளிய
குமரேசா.

வாரியணைத்துத் திருமால் சோதரி
நீலி துரைச்சிப் புவனேஸ் வரி யிரு
மார்பி லுனக்குத் தருபாலவை கொளு
மயில்வீரா.

வாசி யடைத்துத் தரிபோ லுரை தவ
யோகி யுளத்திற் பரஞானமு மருள்
மார்பில் கடப்பத் தணிவே ளறுமுக
னருள் தாராய்.

சீரி விடத்தைத் தரு நீ ளரவினி
லேறி நடித்துக் குழலூதிய முகில்
தேக நிறத்துத் திருமா லுள மகிழ்
மருகோனே.

தேனை மடுத்துச் சிவ வோமென வழி
பாடி யிசைத்துப் பணி மாதவ மிகு
சீல மிகுத்தத் திருவோக முறை
குருநாதா.

---

## திருச்செந்தில்

தந்தனந் தான தான
தந்தனந் தான தான
தந்தனந் தான தான — தனதானா.

மஞ்சளின் வாடை வீசுஞ்
சந்தணங் கூர் சவாது
மங்கையர் காதல் மீறி—யொழியாதே.

வம்பர்க ளோடு கூடி
பொன் பொருள் தேடி நாடி
வன்பிணி யாசையாலு—மழிவேனோ.

வெஞ்சின ரான சூரர்
தன்குல மாய வேலை
வென்றிட நீயு மேவு—முருகோனே.

விஞ்சையின் சாரமான
சம்பிரம ஞான யோக
வின்பெழு போத மோன—விறையோனே.

பந்தமுங் காம மாதி
வென்றிடும் வீர தீரப்
பண்டிதரோடு சேர—வருள் தாராய்.

பங்கச ஞன வேதன்
றன் சிற மோதி யாதிப்
பண்பொரு ளோது சோதி—வடிவேலா,

செந்தமிழான வேத
மந்திர மோது சீலர்
தெங்கொடு மாபலா வின்—பொழில்சூழும்.

சிந்தையின் பாவ நீறு
மங்களம் சேர் விநோதச்
செந்திலங் கோவில் வாழு—குருநாதா 115.

---

ஷை திருத்தணிகை.

தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந்—தனதான.

சளக்குரு மனத்தின்
னுடற் பல வெடுத்துஞ்
சமுத்திர மொலிக்கும்—புவிமீதே.

தனத்துடை மறைக்கும்
பரத்தையர் மயக்கின்
றவத்தினை விடுத்து—மழிவேனோ.

உளத்தினி லினிக்குஞ்
சுகத்தினை யளிக்கு
முனைத் தமிழ் துதிக்க—வருள்தாராய்.

உமைப் பறை யெடுத்து
முகத்துட னணைத்து
வுனக் கமுதளிக்கப்—பெருதேவே.

களத்தினி லெதிர்த்த
வரக்கர்கள் குலத்தைக்
கணத்தினுள் மடித்த—ரகுராமன்.

கருத்திடு நிறத்தன்
னுரல்ப் பிணை சமர்த்தன்
களித்திடு முளத்தின்—மருகோனே.

வளப்பமு மிகுத்த
பொழிற் பல செழித்து
மறைப் பொரு ளுணர்த்து—மடியார்கள்.

மலத்தினை யொழித்துன்
பதப் பொரு ளுணர்த்து
மலைத்திரு தணிக்குள்—குருநாதா 116.

---

## திருவாவினன்குடி.

தனன தனந் தனன
தனன தனந் தனன
தனன தனந் தனன—தனதான.

கடல் சூழ் நெடும் புவியி
லுருவாகி வந்து விழி
கயல் நேர் மடந்தையர்க—ளுறவாகி.

கதிசேர் தவம் புரிய
மதியேது மின்றியொரு
கடையே னழுந்துவது—மழகாமோ.

தொடர் பாசமுந் தொலைய
வுனையே நினைந்துருகி
சுக சாதனம் பெருக—வருள் தாராய்.

துறவா லகங் குளிர
வெழு மோன வின்பரச
சுகுண சவுந்தரிய—முருகோனே.

திடமா யனந்தமறை
யவரோர் படுந் துயரச்
சிறை மீழவுஞ் சமரி—லசுரோர்கள்.

சினமோ டவன் குலமு
மடியோ டழிந்திட வுந்
திகழ் வேல் விடுங்குமர—னுமைபாலன்.

அடர் காவனங் குலவு
குற மாதுடன் புணரு
மறுமா முகன் கனக—மணிமார்பா.

அகில் மாவிளங் கமுகு
பொழில் சூழ் வளம் பதி சொல்
லருளா வினன் குடியிற்—குருநாதா 117.

## அழகநகர் இராஜபாளையம்.

தனன தன தான தான
தனன தன தான தான
தனன தன தான தான—தனதானா.

புவியி லுடலாகி மூடும்
வினை வழியி லேகி நாளும்
புகலு மட மாதராசை—யதனாலே.

புலை கொலைகள் காம மாதி
வறுமை பிணியாலு வாடி
பொருளை மிக நாடி யோடி—யழிவேனோ.

குவியு மலர் மீதில் வாழு
மயனுணர வேத சாரக்
குணமருள் சிவோக நீத—முருகோனே.

குமர சிவ ஞான மோன
சரவண பவா குகாயக்
குறமகள் சமேத ஞேய—குமரேசா.

கவுரி சிவகாமி நேமி
குமரி யபிராமி வாலை
கதியருள் வராகி சூலி—யருள்பாலா.

கலக வசுராதி யோர்க
ளனைவ ருடல் மாய நீயுன்
கரமதனில் வேலை யேவு—மயில்வீரா.

அவனெறியுள் ளான மாயை
முமலமு மிராக மோய
வறுமுகவ னீத போத—னருள்தாராய்.

அதிசய மனேக மோடு
சிவ நம சிவாய மோது
மழக நகர் மீதுலாவு—குருநாதா. 118.

---

ஷை அழகநகர்.

தனதன தனதன
தனதன தனதன
தனதன தனதன—தனதானா.

பரவிய புவிதனி
லுடல் கொடு வறிவையர்
படுகுழி விழுநித—முறவாகி.

பலகலை யுணர்வற
மனைதன நினைவொடு
பல பொழு தினுமினி—யழிவேனோ.

காவொடு புலை கொலை
முமலமு மகல வுன்
கழல் தொழு திலகிட—வருள்தாராய்.

கருமுகில் நிறமுட
னரியணை துயில் பவன்
கழல் முரஹரி திரு—மருகோனே.

சிரவண மனனமு
முடையவ ரடி பணி
சிவ கணபதி தன—திளையோனே.

திரு நட மிடு மொரு
பரசிவ னருளிய
தினகர னொளி வளர்—வடிவேலா.

அரகர வென நித
மறையவர் துதி செய
வளி மது பருகிடு—மலர்சோலை.

அகிலொடு கமுகுயர்
கதலிகள் பலவெழு
மழகையி லொளிர் தவ—குருநாதா 119.

---

## திருச்செந்தூர்.

தனத்தந் தான தனதன தானன
தனத்தந் தான தனதன தானன
தனத்தந் தான தனதன தானன—தனதானா.

விரிக்குந் தாமரை போலெழு பூமியி
லுருக் கொண்டே மடவார் மயலா விரு
வினைச் சென்றே மன வாசையினா லினி
யழிவேனோ.

வெறுப்புந் தூல விராக நிராசையு
மனைத்துந் தானென வாகிய போதமு
மிசைத்துன் சீர்புக ழோதவு நீயுன
தருள்தாராய்.

பொரிக் கண் தியசு ராதியர் மாயவு
மிடுக்கத் தேவர் வியாகுல மோயவும்
பொறுப்புந் தூள்பட வேகதிர் வேல் விடு
மயில்வீரா.

புகழ்ப் பெண் தேவி வராகி மனோன்மணி
யணைத்துஞ் சூலியு மா பரமேஸ்வரி
புகட்டும் பாலை விடாதுள மேகொளு
முருகோனே.

தரிக்குஞ் சூல கபாலமு மான்மழு
வரற் கன்றேதிய வாவொரு மாமொழி
தகப்பன் சாமி சராசர பூரண
னொருகோடி.

தளத்தின் போர் முனை தானதிலே ரதம்
விடுக்குங் கார்முகில் மேனிய னுமரி
தவத்தின் பேரென வேயுள மால்மகிழ்
மருகோனே.

தெரிக்கும் பேரொளி யோகமு ஞானமுங்
குடத்தன்றே யெழு வாழ் பொதிகாசலங்
திகழ்ச் சந்தான சிவோக மகாதவ
ரதிரூமும்.

செழிக்கு மாபல பூகமு வாழைகள்
தருக்கள் சூழ் பொழில் வான மளாவிய
திருச்செந்தூர் வளர் பாவ விமோசன
குருநாதா 120.

## அழகநகர் ராஜபாளையம்.

தனன தானன தான தனதன
தனன தானன தான தனதன
தனன தானன தான தனதன—தனதான.

உடலி னுசையி னலடியே னிரு
வினைக ளோருரு வாகியு மேயினி
வுலக மீதினி லேமட வார் மயல்
கொண்டுவாடி.

உணர்வு தானென வோது பராபர
பொருளை நாடு சிவோக மகாதவ
னுனது பாத முராது சதாமன
மஞ்சுவேனே.

கடலிலே நடுவே துயில் ராகவ
னிடையர் பால் தயிரேகவர் மாயவன்
கருடனேறி யுலாவிய மால் மரு
கன்குமரன்.

கடைய னேனுனை யேதுதி பாடியு
மவுன மோன சுகோதய மாகிட
கமழ் சொரூப விராக நிராசையும்
வந்துதாராய்.

படையிலே யசுராதியர் மாயவு
மமரர் வாழ் சிறை மீழவு மோர் சிலே
பகைவர் மீதினி லேகதிர் வேல்விடு
கந்தவேளே.

பரமர்க் காதினி லேயொரு மாமொழி
வுணர வாதியில் மோன சுகோதயப்
பகர் விநோத மயூரம தேறிய
தந்தைசாமி.

அடரு மாபல பூகமும் வாழையுஞ்
செடிகளாற் மலர்த் தேனையு மேகொளு
மளிகள் வேத புராண சிவாகம
மென்றுபாடும்.

அதிகமாய் வளர் யோகியர் ஞானியர்
பகரு நாவலர் பாவல ரானவர்
அழகை மாநகர் மீதினிலே யுரை
யெம்பிரானே 121.

---

## இளையபெருமாள்மலை.

தனன தனதாந்தன தானதன
தனன தனதாந்தன தானதன
தனன தனதாந்தன தானதன—தனதான.

பரவு புனல் சூழ்புவி மீதே யிரு
வினைக ளுருவாய் வரு சேயே னினி
பகரு மடவார் மயலாலே யிரு
நிதிதேடி.

படரு மன மாந்திரி பாலேயுனை
வுணர வறியாதுள மாலா லிடர்
பலித மதனாலருள் சேராதுல
கழிவேனோ.

கரவு கொலை யூழ்மது காமாதிகள்
முமலமறு தேர் சுக நானேகிட
கருணை மிகுதி யதனாலே யுன
தருள் தாராய்.

கடைய னெனை நீ சிறு போதே யுன
தடிமை யென வாழ் முருகேசா வுயர்
கடவுள் விரைவாய் மயில் மீதே வரு
மிறையோனே.

துரவு நெறியா லவ மாகா தொளிர்
மவுன நிலை மாதவ மோயா தெழத்
துணியு மவர் தாழ் பணி வேலாயுத
குமரேசா.

துளப மணி தார் நெடுமால் கேசவ
னிடையர் மனை தோர் தயிர் பாலே கவர்
சுகுண னரி மாயவ நாராயணன்
மருகோனே.

இரவி மதியார் புனல் வாழ் வேணியன்
குமரியொடு சீரெதிர் வாதாடிய
யிறைவ னொரு மாமொழி தானேகிட
வருள்தேவே.

இணையி லுயர் மாகமு கேழ் பாளையும்
விரியு மலர் தேனளி சோராதடை
யிளைய பெருமாள் மலை மேல் வாழ்சிவ
குருநாதா 122.

## ஷை இராஜபாளையம் சஞ்சீவிமலை.

தந்தன தனன
தந்தன தனன
தந்தன தனன—தனதான.

மங்கள வினோதந்
தங்கு புவி மீதில்
வந்து மடவார்கள்—மயலாலே.

வம்பரொடு கூடி
பொன் பொருளை நாடி
வன் பிணியினாலு—மழிவேனோ.

எங்கு நிறைவான
வுந்தனிரு பாத
மென்று மகலா துன்—னருள் தாராய்.

யெஞ்சு மசுராதி
தங்கள் குல மாய
வின்ப வடி வேலை—விடுதேவே.

செங் கருட னேறுந்
தண்டுளப மார்பன்
சிந்தை மகிழ் மாயன்—மருகோனே.

செந்தி நகர் வாசன்
கந்த குமரேசன்
தென்பழனி வாழு—மயில்வீரா.
சங்கரி வராகி
மங்கை சிவகாமி
தந்த சிவஞான—முருகோனே.
தந்தி நடமாடுந்
துங்கமலை மேவுஞ்
சஞ்சிவியி னமக்—குருநாதா 123.

---

## ஷ சிவகிரி.

தனதன தனதன
தனதன தனதன
தனதன தனதன—தனதான.

புவிதனி லுடல் கொடு
வறிவையர் சுகமொரு
பொருளென வனுதின—மிகநாடி.

பொறை தவ நெரியுன
தடிதொழு மடியவர்
புகலொரு மொழிதனை—புணராமல்.

துவிதம துடனெழு
வினைவச மதிநெடு
சுழல் திரணமு மென—வழிவேனோ.

தொடர் பவ நிலைகெட
வினவியு மருணெறி
சொலுமவர் பணிசெய—வருள் தாராய்.

பவமிகு மசுரர்கள்
குலமற வமர்தனில்
படைவிடு மறுமுக—வடிவேலா.

பறை திரி புரையுமை
யவள்தரு மமுதினைப்
பருகிடு மரகத—மயில்வீரா.

செவிதனி லருமறை
முடியினி லனுபவஞ்
சிவனுற வருளிய—குமரேசா.

திகழ் கமுகொடுபல
மலர் பொழிலதி வளர்
சிவகிரி தனிலுறை—குருநாதா 124.

---

## ஷை அழகாபுரி.

தனத்தத் தான தனதன தானன
தனத்தத் தான தனதன தானன
தனத்தத் தான தனதன தானன—தனதான.

உரைக்கச் சாகர மேலெழு பூமியி
னிடத்திற் பாழ்வினை யாலடியே னினி
யுறத்துக் காண் மடவார் மயலாலுனை
யறியாமல்.

வுணர்த்துப் போத சொரூப நிராசையு
விடுத்துச் சேர்மல கோசம தோடுரை
யுலுத்தர் சேகர மாகியு நாடொரு
மழிவேனோ.

மறைக்குட் டோனு மகாதவ மோர்மொழி
யாற்குப் பூண விதோவென வோதிய
வகத்திற் சோதி நிராமய மாகிய
குமரேசா.

மலத்திற் சேரசுராதிய ரேூடமர்
தொடுத்துத் தேவர் வியாகுல மோயவு
மறித்துச் சால சுகோதய வேல்விடு
மயில்வீரா.

திரைக்குள்ச் சோக முராது சதாவுனே
நினைப்பாடும் விராகம தோடிசை
தெரித்துப் பாத சிவோகம தாகிட
வருள்தாராய்.

திறத்திற் காளி யுமா பரமேஸ்வரி
மலைக்கிச்சே யபிராமி மனோன்மணி
செனிக்கச் சூலி வராகி பராபறை
யருள்பாலா.

வரைக்குட் டேவர் மகாமுனி யோகியர்
தவத்திற் கூடு மெஞ்ஞானிய ரானவர்
மனத்திற் பேதமிலாத தபோதன
ரதிசூழும்.

வளத்திற் சாக மளாவியு மாபல
விருச்சத் தோடகில் சோலையு மாய்நிறை
வனத்தைச் சேரழகாபுரி மேவிய
குருநாதா 125.

## ஷை கதிர்காமம்.

*தந்த தன தான*
*தந்த தன தான*
*தந்த தன தான—தனதான.*

மன்றி னுருவாகி
பந்தமல மேவி
மங்கையர்க ளாசை—யதனாலே.

வந்துபொருள் தேடி
நொந்து மனம் வாடி
வன்கொடுமையாலு—மழிவேனோ.

துன்று மனமாயை
வென்று வுனைநாடி
துன்பமற நீயுன்—னருள்தாராய்.

தொந்த மென வாடு
மங்கை சிவகாமி
சுந்தரி வராகி—யருள்பாலா.

சென்று வமரோர்கள்
தன் சிறையு மீள
சிந்தை யனலாகு—மசுரோர்கள்.

தெம்பு முடல்மாய
வங்கை வடிவேலை
சிங்கமென யேவு--முருகோனே.

என்று மடியார்கள்
தண்டமிழ் விவேக
ரின்ப நிறைவான--பெரியோர்கள்.

யெங்கு மதி சூழும்
பொங்கு புனலோடு
மெந்தை கதிர்காம—குருநாதா 126.

---

ஷ்டி திருப்பரங்கிரி.

தனத்தத் தான தனந்தன தந்தன
தனத்தத் தான தனந்தன தந்தன
தனத்தத் தான தனந்தன தந்தன—தனதானு.

முகத்திற் பூசிய குங்கும மஞ்சளு
மணக்கக் கார்குழல் மங்கைய ரம்புச
முலைக்குள்ச் சேர் மயல் கொண்டுமினந் துய
ரடைவேனே.

மொழிக்குள் காரண விஞ்சை யெனும் பொரு
ளெனக்குள் காணு மிருந்த வருந்தவ
முளத்திற் ேறூய வுகந்து விரைந்துன
தருள் தாராய்.

இகத்திற் றேவர் படுஞ்சிறையுங் கெட,
நினைத்துப் போர்தனில் நின் றசுரன்குல
மிறக்கத் தோர் படையுந் தொடு சம்பிரம
வடிவேலா.

யெடுத்துப் பாலமுதந் தனை யம்பிகை
மலைக்கிச்சே யுமை தந்திடவுங் கொளு
மெனக்குச் சால சுகந்தனை யுந்தரு
முருகோனே,

நகைத்துப் பாதக வெஞ்சினருந் திரி
புரத்தைத் தூள்பட வன்றெழு சங்கர
னவற்குப் போதமுறும்படி யுஞ்செயு
மயில்வீரா,

நதிக்கித் தாயக வெண்கடலுந் துயில்
நிறத்திற் கார் முகில் பைந்துளபம் புனை
கடித்துச் சீரற வந்தனை வென்றிடு
ரகுராமன்,

அகத்திற் றேடி மகிழ்ந்து புகழ்ந்திடு
தவத்திற் பேர்மரு கன்குக னென்றிடு
மனத்துள்ச் சோதி நிறைந்து விளங்கிய
குமரேசா.

அசைத்துப் பூக மடர்ந்தெழு தெங்குகள்
மனத்திற் பேத மறும்படியுஞ் சொலி
யரற்றுச் சோலை யடர்ந்த பரங்கிரி
குருநாதா. 127.

---

ஷை அழகாபுரி.

தனந தன தனந தன
தனந தன தனந தன
தனந தன தனந தன — தனதாந.

கடல்சூழ் புவி தனிலே யிரு
வினையா லுட லுரு வாகிய
கடையே னெழு மடவார் மய—லதனாலே.

கதிசேர் தவ நிலையா தென
வுணரா திடர் படுவே னினி
கனலா கிய துயர் மாய்கையி—லழிவேனோ.

திடமா யுன தடியே பணி
மதியா லுயர் புகழ் பாடிட
திருமால் மரு மகனே யுன—தருள் தாராய்.

சிவனு ரிரு செவிதா னுற
வொருமா மொழி தனையோதிய
தெருளே யரு முகமாய் வரு—குமரேசா.

படர் பாசம துடையா ரெனு
மசுரேர் குல மறவேல் கொடு
பகர் தேவர்கள் சிறை மீளவு—மடுதேவே.

பரைமா துமை புவ னீஸ்வரி
மலையான் மக ளிரு மார்பினிற்
பலநாள் தரு மமுதே கொழு—முருகோனே.

அடர் காவன மிகு மாபல
தரு பூகம தொடு சாகினி
யகில் சூழ் பொழில் மலையார் புனல்–வயல்பாயும்

அடியார் தவ முனி யோகிய
ருறைசீர் பதி மறை யோதிடு
மழகா புரி தனிலே வளர்—குருநாதா. 128.

ஷ அழகமாநகர்.

தனதன தனதன தனத்த தந்தன
தனதன தனதன தனத்த தந்தன
தனதன தனதன தனத்த தந்தன—தனதானு.

உலகினில் வினையுட லெடுத்து வஞ்சக
மகளிர்கள் மயல்தனை யடுத்து நெஞ்சினில்
வுயர்மனை தனமென நினைத் தினைந்துய
ரடைவேனே.

வொரு மொழி யனுபவ முணர்த்து சம்பிரம
சரவண பவகுக னெனப் புகன்றிடு
முனதிரு மலரடி துதித் தடைந்திட
வருள்தாராய்.

கலகமு நிறைமன மரக்கர் தங்களை
சிலைகொடு சமர் தனில் செகுத்த வன்செரி
கருமுகில் நிறமுடை யவர்க்கு மன்புள
மருகோனே.

கழல் மறையவர் படுந் துயர்ப் பறந்திட
வசுரர்கள் குலமதை யழித்திடுங் குகன்
கறைமிடர் தனிலுறை யரற்கு முன் புகல்
மயில்வீரா.

மலமறு மடியவர் மகத்துவம் பெரு
முனிவர்க ளிருடியர் தவத்துறைந்திடு
மதியுடை யவர் தின முனைப்பணிந்திட
வருதேவே,

மலைமகள் பைரவி யுமைச்சவுந்தரி
திரிபுரை யவளுனை யணைத்து மன்பொடு
மழையென வமுதமு மளிக்கவுங் கொளு
முருகோனே,

பலவொடு கதலிகள் பழுத் துதிர்ந்திடு
வளமுய ரகிலெனும் விருச்சமுந் திகழ்
பரவிடு மருவிகள் சிறக்கவும் புனல்
வயல்பாயும்,

பரிமள மிகுமது மலற்றரும் பொழில்
யடர்பதி யாகர வெனச் சுரும்பினம்
பகரழகையி லொளிர் சமத்துவந் தரு
குருநாதா 129.

## குன்றுதோராடல்.

தந்தன தானன
தந்தன தானன
தந்தன தானன—தனதான.

வஞ்சமால் மாதர்க
ளின்பமோ டூழ்வலி
வந்து போராடுத—லதனாலே.

மன்றில் மூவாசையின்
சிந்தையால் வாடியு
மண்டு பாழ் மாயையி—லழிவேனோ.

பஞ்சமா பாதக
னெஞ்சி னோராகிய
பண்பிலா தேயெழு—மசுரோர்கள்.

பந்தி வாளுடல்
பொன்றவே லேவியும்
பங்க வானோர் சிறை—யடுதேவே.

கஞ்சமேல் நான்முகன்
றன் சிற மோதிய
கந்தநாதா வெனுங்—குமரேசா,

கங்கை மாகேஸ்வரி
மங்கை சீர் மாதுமை
கண்டு பாலேதா—பெருவோனே,

கொஞ்சு தேவானையி
னன்பினு லேயவள்
கொங்கை சேர் வேளெனு—முருகோனே.

கொன்றை தேனூர் மல
ரெங்குமே சூழ் பொழில்
குன்று தோராடலிற்—குருநாதா 130.

---

ஷை அழகாபுரி.

தானத் தந்தான தனதன
தானத் தந்தான தனதன
தானத் தந்தான தனதன—தனதானு.

பூமிக்குள் ளோருருவாய் மட
மாதற் பொன் மாளிகை வாழ்வெனு
போகத்தின் ஞசையினு லினி
யழிவேனே.

பூசித்தும் பாவ விமோசன
தாசர்க்குஞ் சேவையி னுலுயர்
போதத் துள்ளாகவு நீயுன
தருள்தாராய்.

வாமிக் கல்யாணி மனேன்மணி
தேவிச் சொல் லீஸ்வரி யாளுமை
வாலைக் கண் மாமணி வாவென
வுனைநாடி.

வாரித் தன் மார்பினி லூரல்கள்
பாலிக்கத் தானுழமே கொளு
மாசற்றுப் பேர் தவ ஞானிய
ரடைதேவே.

நேமிக்கப் பாரத மாதிபி
லோயச் சென்றேர் பரி யேவிடு
நீலத்துக் கார் வடிவாகிய
ரகுராமன்.

ஞேயத்துக் கோர் மருகோனெனு
வேள் பத்மப் பாத சுகோதய
நீ யெற்குத் தானருள் தேசிக
விறையோனே.

காமிக்குள்ப் பாசமு மூழ்வினை
தீரச் சொல் மாதவர் யோகியர்
காலத்தைக் கூர்முனி ஞானிய
ரதிசூழும்.

காவிற் றண் மாபல சாகமு
நீள் பொற்புச் சூழவு மாய்வளர்
காதற்குப் பேரழகா புரி
குருநாதா 131.

---

ஷை அழகமாநகர்.

தான தனத்தந்
தான தனத்தந்
தான தனத்தந் — தனதானா.

பாரி லுதித்துஞ்
சேல் விழி யொக்கும்
பாவைய ரிட்ட—மகலாமல்.

பாலன் மனத்தின்
காசு பணத்தின்
பாசமிருத்து—மழிவேனோ.

வாரி யடைத்துஞ்
சேனை விடுத்தும்
வாழி தொடுக்கு—ரகுராமன்.

மாய னுளத்தின்
காதல் சிறக்கு
மார்பில் கடப்ப—மணிவோனே.

௬ சேரி லமிழ்த்துங்
கோச மகற்றுன்
சீர்கழல் பற்ற—வருள்தாராய்.

தேவி யெடுத்து
மார்பி லணைத்தன்
க்ஷீரமளிக்கப்—பெருதேவே.

போரி லெதிர்த்துஞ்
சூரை யழித்தும்
பூசுரர் துக்க—மதுசாடும்.

பூவலர் நித்தங்
காவன முற்றும்
பூணமுலைக்குள்—குருநாதா 132.

---

## திருத்தங்கால்.

தனத்தந் தான தனதன தத்தன
தனத்தந் தான தனதன தத்தன
தனத்தந் தான தனதன தத்தன—தனதான.

அருக்கன் பார்புவி மீதிலுருக்கொடு
தடத்தின் சேல்விழி மாதர் மயக்கினி
லமிழ்த்தும் பாழ்வினை யாலு மினித்துய
ரடைவேனோ.

அகத்தின் சோக மிலாது வினைத்தின
நினைத்துமப் பாடு விராக முதித்திட
ரனைத்தும் போக நிராசையு முற்றிட
வருள்தாராய்.

கருக்குந் தீயசுராதியர் முற்றினு
மடித்துந் தேவர் வியாகுல மற்றிட
கறத்தின் கூர்வடி வேல்விடு சுப்பிர
மணியோனே.

களத்திற் பாரதப் போர்முனை யர்ச்சுனன்
ரதத்தின் மாவினை யேவிடு மச்சுதன்
களிக்குஞ் சீர் மரு கோனெனு முற்பவ
முருகோனே.

தரிக்குஞ் சூல கபால மழுப்படை
யாற்கன் றோர் மொழி தானரு ளற்புதன்
தகப்பன் சாமி சராசர சிற்பா
னுனைநாடும்.

தவத்துள் ளான மெஞ்ஞானியர் பக்தர்கள்
வுளத்தின் பேத மிலாதரு முத்தர்கள்
சகத்தின் மாய்கை யுராத சமத்துவ
ரடைதேவே.

தெருள்க் கண் பார்வதி தேவியுமைப் பறை
நடிக்குங் காளி வராகி துரைத்தனி
செலுத்தும் பால் கொளு மானை முகத்தவ
னிளையோனே.

செளிக்கும் வாழை பலாவொடு முக்கனி
பழுக்குஞ்சாலி சதா விளைவித்திடு
திருத்தங்கால் மலை வாழு மகத்துவ
குருநாதா 133.

## வாழி விருத்தம்,

சரவண பவ வோமென்னுஞ் சண்முகன் பாதம் வாழி
காவுபொய் கொலைகள்காமங் கடிந்தமாதவரும் வாழி
திறமுடனசுரர் தன்னைச்செகுத்தவேல் தினமும்வாழி
அரசுட னுலகும் வாழி யருள்ப்புகழ் வாழிமாதோ.

முற்றும்.

ஜெயராம்பிரஸ், இராஜபாளையம்–26.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 4 | வேலா | வேலே |
| 8 | 6 | மென | மென் |
| 36 | 6 | வடிவேலா | கூரிறையோனே |
| 39 | 15 | விநோதமய | சதாவுன துன் |
| 40 | 12 | யமரார் | யமர் |
| 56 | 6 | மரைக்குல | மரைப்புக |
| 60 | 3 | நாளும் | நானும் |
| 65 | 5 | முடையர் | முடையவர |
| 71 | 14 | வொருமொழி | வொளிர்மாமணி |
| 79 | 7 | மயக்கி | மயக்கிற்பு |
| 84 | 15 | ழகற்றுவாச | ழகற்றும்பாச |
| 91 | 12 | சாரவுன் | சாரவுமரு |
| 99 | 2 | மேகிட | மேகெட |
| 103 | 7 | லோர்கல | லோர்கவ |
| 121 | 6 | ணரற்கு | ரரற்கு |
| 136 | 11 | மின்புதலி | மின்புதவி |
| 142 | 16 | மனத்திரு | மனதிரு |
| 149 | 12 | தேவர்தேவர் | தேவர்சிரைப்ப |
| 150 | 9 | விரந்த | நிரத்த |
| 153 | 2 | மெனும்பொருள் | மெனுந்தெருள் |
| 153 | 4 | த்துடனெழு | த்துடன்வரு |
| 184 | 10 | போரிரெதிர்கு | போரிலெதிர்த்து |
| 196 | 12 | மால்மருகன் குமரன் | குமாரன் |
| 197 | 5 | சுகோதயப் | சுகோதயம் |
| 214 | 5 | தாசற்குஞ் | தாசற்குன் |